₹10

fmpb

# அறைகூவல்

Volume 53 Issue 12 December 2023

நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்
ஆகாய் 2:23

2023-ம் ஆண்டின் நோக்கம்

# பாக்கியவான்களாய் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்

*கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும் அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது. – சங்கீதம் 33:12*



# ஆரம்ப வரிகள்...

## மக்காரியோஸ்...

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான அறைகூவல் வாசகர்களுக்கும், ஜெப வீரர்களுக்கும் செயல்வீரர்களாய் செயல்படும் அனைத்து உள்ளங்களுக்கும் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

மக்காரியோஸ், அது கிரீஸ் நாட்டிலுள்ள ஒரு தீவின் பெயர். கிரேக்க மொழியில் மக்காரியோஸ் என்பதின் அர்த்தம் ஆசீர்வதிக்கப்பட்ட தீவு என்பதாகும் (Blessed Island). அதற்கான காரணம் அந்த தீவின் தேவைகள் அனைத்தும் அந்த தீவிலேயே பூர்த்தி செய்யப்படும். எந்த தேவைகளுக்கும் வேறு எந்த தீவிற்கும், நாட்டிற்கும் செல்ல வேண்டிய அவசியமில்லை. இத்தீவின் இயற்கை வளங்கள் மிகவும் அடர்த்தியானதாகவும், வளமானதாகவும், அநேக பலனளிக்கக் கூடியதாகவும் இருந்தது. தங்கள் வாழ்விற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக கட்டமைக்கப்பட்டிருந்தது. அப்படி அந்த தீவு தன்னிறைவுப் பெற்ற தீவாக இருந்ததால் “ஆசீர்வதிக்கப்பட்ட தீவு” என வரலாறு கூறுகிறது. அந்த தீவு போன்றே கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது என சங்கீதம் 33:12-ல் வாசிக்கிறோம்.

கிறிஸ்தவர்களாகிய நமக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே அந்த ஆசீர்வதிக்கப்பட்ட தீவு. அவருக்குள் நம் வாழ்விற்குத் தேவையான அனைத்து ஆசீர்வாதங்களுமே உண்டு. ஆனால் இந்த உலகம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுக்கு விளக்கம் தரும்போது, 1 மனைவி, 2 குழந்தைகள், 3 படுக்கையறைகள் கொண்ட வீடு, 4 சக்கர வாகனம், 5 இலக்க சம்பளம் என ஆசீர்வாதத்தை வகையறுக்கின்றது. நமக்கு உலகம் கற்றுத்தரும் இப்படிப்பட்ட தீவு போன்ற இடங்களோ அல்லது வசதிகள் நிறைந்த வாழ்வோ மெய்யான ஆசீர்வாதமல்ல. பவுல் எபேசியர் 1:3-14-ல் ஆசீர்வாதத்தை பட்டியலிடும்போது, கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதித்திருக்கிறார் என்று குறிப்பிடுகிறார். அதில்: கிறிஸ்துவுக்குள் நம்மை தெரிந்தெடுத்திருக்கிறார் வச.4. அவருடைய சுவிகாரபுத்திரராய் முன்குறித்திருக்கிறார் வச.6. அவரால் மீட்பு, அவருடைய இரத்தத்தினால் பாவ மன்னிப்பைத் தந்திருக்கிறார் வச.7. சகல ஞானத்தையும், புத்தியையும் பெருகப்பண்ணுகிறார் வச.8. பரலோக மற்றும் பூலோக ஆசீர்வாதத்தினால் நிறைக்கிறார் வச.9. தேவனுடைய சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார் வச.10. மகிமையையும், புகழ்ச்சியையும் நமக்கு உண்டு பண்ணுகிறார் வச.11. அவருடைய பிள்ளைகளாக சுதந்தரமாக தெரிந்துகொள்கிறார் வச.12. பரிசுத்த ஆவியினால் அவருக்குள் முத்திரைப்போடுகிறார் வச.13. அவருக்கு சொந்தமாகவும், சுதந்தரமாகவும் அச்சாரமாக்கினார் வச.14. கிறிஸ்துவின் மூலமும், கிறிஸ்துவிற்குள்ளும் நமக்கு கிடைக்கப்பெற்ற பரிசுகள்தான் எத்தனை! உலகம் கூறும் ஆசீர்வதிக்கப்பட்ட தீவினாலும் அல்ல, 5 விதமான ஆசீர்வாதங்களினாலும் அல்ல, கிறிஸ்துவிற்குள் மட்டுமே இது கூடும். அசைக்க முடியாத ராஜ்யமும், ராஜாவுமாக கிறிஸ்துவே நமக்கு இருப்பதால் அவரே, நமது ஆசீர்வாதமும், ஆசீர்வாதத்தின் வாய்க்காலுமாய் இருப்பதினால் நமக்கு ஒரு குறைவுமில்லை. இப்படிப்பட்ட பாக்கியத்தைப் பெற்ற நாம் இந்த பாக்கியத்தை அறியாத மக்களுக்கு அறிவித்து, அழிவில்லா ராஜ்யத்தின் சுதந்தரவாளிகளாய் மாற்றுவோம். இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் ஆசீர்வாதத்திற்காக ஏங்கி நிற்கும் அநேக உள்ளங்களிலும், இல்லங்களிலும் அழிவில்லா மீட்பின் செய்தியான ஆசீர்வாதத்தை ஒருங்கேப் பெற்ற கிறிஸ்துவை குடியமர்த்துவோம், அதற்காகவே நாம் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். கர்த்தர் தாமே நம்முடைய ஆசீர்வாதமும், ஐசுவரியமுமாய் கடந்த ஆண்டு முழுவதும் இருந்ததுபோல வருகிற புதிய ஆண்டிலும் இருப்பாராக ஆமென்!

**- மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

**நமது தரிசனம்:**
சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**
தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.


**அறைகூவல்**

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |

*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*



**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*


# பொதுச்செயலாளரிடமிருந்து...

சந்திக்கப்படாத மக்களை சுவிசேஷத்தால் சந்திக்கும் ஊழியத்தின் பங்காளர்களே!

அறுவடை நாயகரின் நாமத்தில் பண்டிகை கால வாழ்த்துக்கள்!

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு என்கிற பெரிய குடும்பத்தின் ஊழியர்கள், ஜெபக்குழுத்தலைவர்கள், பணித்தளத்தின் விசுவாசிகள் சார்பாக, பாவத்திலிருந்து மனுக்குலத்தை மீட்டு பரம தகப்பனோடு மீண்டும் ஐக்கியம் கொள்ள வைக்க பெத்லகேமில் பிறந்த நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்து சொல்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இயேசு கிறிஸ்துவை பாதுகாப்பற்ற சூழ்நிலையில், அதிகம் அறியப்படாத யோசேப்பின் எளிய குடும்பத்தில் கொண்டு வந்தது கிறிஸ்துமஸ் பண்டிகையின் முக்கியத்துவங்களில் ஒன்று. இருப்பினும் பிதாவாகிய தேவனின் பாதுகாப்பு கிறிஸ்து மேலே ஆரம்பத்தில் இருந்தே காணப்பட்டது. குழந்தை இயேசுவை தூக்கிக்கொண்டு ஏரோதுவின் கைக்கு தப்புவிக்க யோசேப்பை எகிப்துக்குப் போகச் சொல்லும்போதே இந்த பாதுகாப்பு வெளிப்படுத்தப்படுகிறது (மத்.2:13). நம்மில் பலர் எந்த காரியங்களிலும் அல்லது யாருக்கும் பலவீனமாக இருக்க விரும்புவதில்லை. நம்முடைய குடும்பம், குழந்தைகள், சுகநலன்கள் மற்றும் பணத்தேவைகளை உறுதியாக்கும் பொருட்டு நாம் எடுக்கின்ற முயற்சிகள் இயற்கையானதுதான்.

போர்களும் சச்சரவுகளும் நம்மை எல்லா இடங்களிலும் நெருக்கி ஏவும்போது கீழ்க்கண்ட தேவ வார்த்தையை நினைவு கூறுவது சாலச்சிறந்தது.

கர்த்தர் வீட்டை கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா; கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித் திருக்கிறது விருதா. சங். 127:1,2

**அருட்திரு. ஜங்கோலுன் தௌதாங்கின் விடுவிப்பு:** அநேகருடைய ஜெபத்தின் பலனாக 23 நாட்கள் சிறைச்சாலையிலிருந்த பின் நமது உத்தரப்பிரதேச ஊழியர் ஜங்கோலுன் தௌதாங் கடந்த 27-ம் தேதி அக்டோபர் மாதம் பிணை கிடைக்கப்பெற்று நவம்பர் 4-ம் தேதி விடுவிக்கப்பட்டார்.

**தேசிய ஊழியர் பயிற்சி மையத்தின் ஊழியங்கள்:** பிற கலாச்சார தொடர்புகள் பற்றிய வகுப்புகள், ஜான்சியில் அமைந் துள்ள நமது தேசிய ஊழியர் பயிற்சி மையத்தில் பயிற்சி எடுத்துக்கொண்டிருக்கும் நமது இளம் ஊழியர்களுக்கு, அக்டோபர் திங்கள் 23-ம் தேதி முதல் 29-ம் தேதி வரை நடத்த தேவன் உதவி செய்தார். இளம் ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்ட இப்பயிற்சி அவர்கள் பணித்தளத்தில் பணிச்செய்யும்போது மிகுந்த பலனுள்ளதாக இருக்கும்.

**பட்டமளிப்பு விழா:** ஐந்து மாதங்கள் பணித்தளப்பயிற்சி மற்றும் 10 மாதங்கள் தேசிய ஊழியர் மையத்தில் பயிற்சி என்று தங்களைத் தேவப்பணிக்கென தகுதிப்படுத்திக்கொண்ட 11 மிஷனரிகள் அக்டோபர் திங்கள் 29-ம் தேதி இரவு நடந்த விழாவில் பட்டமளிக்கப்பட்டனர். நமது இயக்கத்தின் தலைவர்கள், ஜான்சி நகரின் சபை தலைவர்கள், மிஷனரிகளின் பெற்றோர், உறவினர்கள் மற்றும் விசுவாசிகள் கலந்துகொண்ட இந்த விழாவில் பயிற்சி நிறைவுசெய்து பணித்தளம் செல்லும் மிஷனரிகள் தேவ பணியினை நம் நாட்டின் எந்த மூலையிலும் செய்ய மீண்டுமொருமுறை தங்களை அர்ப்பணித்துக்கொண்டனர். இயக்கத்தின் மனிதவள மேம்பாட்டுத்துறை செயலர், பணித்தள செயலர் மற்றும் பிற செயலர்களும் கலந்துகொண்டு இளம் மிஷனரிகளை உற்சாகப்படுத்தினர். கர்த்தரின் கையில் பயன்படக்கூடிய பாத்திரங்களாக இந்த இளம் மிஷனரிகளை உருவாக்கிய பயிற்சி மையத்தின் செயலர் அருட்திரு. என். ராஜதுரை குடும்பத்திற்கு நன்றி கூறுகிறோம். தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணித்தளங்களுக்குச் சென்றுள்ள மிஷனரிகள் பாங்காய் ஊழியத்தை நிறைவேற்ற ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**டிவிஷ்னல் செயலர்கள் கூடுகை:** தரிசன பூமியான பெரியமலையில் 2 நாட்கள் உபவாச ஜெபம் மற்றும் 2 நாட்கள் திட்ட மிடுதலுக்காக டிவிஷ்னல் செயலர்களின் கூடுகை நவம்பர் 3-ம் தேதி முதல் 6-ம் தேதி வரை நடைபெற்றது. தேவனின் பாதத்தில் அமர்ந்திருந்து ஜெபித்தது ஆவிக்குரிய ஆசீர்வாதமாக இருந்தது மட்டுமல்ல திட்டமிடுதல் ஆக்கப்பூர்வமாக அமைந்தது.

**மண்டல மற்றும் பிராந்திய செயலர்கள் கூடுகை:** டிவிஷ்னல் செயலர்களின் கூடுகையினை தொடர்ந்து பணித்தள மண்டல செயலர்கள் 2 நாட்களும் அதன் பின்னர் பணித்தளப் பிராந்திய செயலர்கள் அவர்களோடு இணைந்து 2 நாட்களும் திட்டமிடுதலுக்காக நவம்பர் 7-ம் தேதி முதல் 10-ம் தேதி வரை கூடினார்கள். அமைதி யான இடத்தில் ஒன்றுபட்ட உணர்வுடன் நடத்தப்பட்ட இந்தக் கூடுகைகளில் இதயம் திறந்து விவாதிக்கப்பட்டது. திட்டமிடப்பட்டுள்ளவைகள் நிறைவேற்றப்பட ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**பாவ்ரா மொழியில் புதிய ஏற்பாடு:** நான் முன்னரே எழுதியிருந்தபடி நவம்பர் திங்கள் 14-ம் நாள் மகாராஷ்டிரா மாநிலத்தில் அமைந் துள்ள போரடி பணித்தளத்தில் வைத்து தேவநாம மகிமைக்கென்று பாவ்ரா மொழியில் புதிய ஏற்பாடு அர்ப்பணிக்கப் பட்டது. ஏராளமான விசுவாசிகள், பிற மொழி

களில் வேதாகம மொழிப்பெயர்ப்பாளர்கள், சக மிஷனரிகள் குழுமியிருந்த இந்த அர்ப்பணிப்பு நிகழ்வு மனதை மிகவும் தொட்டதாக அமைந்தது. ஏனென்றால் பாவ்ரா இனமக்களின் மத்தியில் ஊழியம் செய்து வேதாகமத்தை அவர்கள் மொழியில் மொழிப்பெயர்க்க தன் வாழ்க்கையின் பெரும் பகுதியை அதற்கென்றே செலவழித்த அருட்திரு. இம்மானுவேல் இறைபிச்சை இந்த வரலாற்று நிகழ்வில் பங்குபெற இயலாமல் இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர் விட்டுச்சென்றுள்ள இந்த ஊழியத்தினை அவரது துணைவியார் திருமதி. ஜேன் அமுத கிருபை தொடர்ந்து செய்து வருகிறார். இதழில் இடமில்லாத காரணத்தினால் தனியாக இந்த நிகழ்வு பற்றி வரும் இதழ்களில் வெளியிட வாஞ்சிக்கிறோம்.

**டிசம்பர் மாத நிகழ்ச்சிகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.**

**பிற கலாச்சார தொடர்புக்கானப் பயிற்சி முகாம்:** கிழக்கு மற்றும் வட கிழக்கு பணித்தளங்களில் பணியாற்றும் மிஷனரிகளுக்காக பிற கலாச்சார தொடர்புக்கான புத்துணர்வு பயிற்சி முகாம் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் நடத்த திட்டமிடப்படுள்ளது. இந்த முகாம் நமது மிஷனரிகளுக்கு ஆக்கப்பூர்வ நலன்களைக் கொணர்வதாகவும் அவர்தம் ஊழியங்களில் புத்துணர்வினை ஊட்டக்கூடியதாகவும் அமைய ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**ஆந்திரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பணி ஊழியங்கள்:** கர்த்தருக்குச் சித்தமானால் ஆந்திர மாநிலம் காக்கிநாடாவில் போதகர் சாம் பென்னியின் சபையில் டிசம்பர் 9-ம் தேதி தேவசெய்தியளிக்க இருக்கிறேன். போதகர் சாம் பென்னி தமது சபையினரோடு நமது ஊழியங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கின்ற, அதிகமாகக் கொடுக்கின்ற ஒரு உத்தம ஊழியர். விசாகப்பட்டினம் கல்வாரி பாப்திஸ்து சபையின் 75-வது ஆண்டு விழாவில் டிசம்பர் 10-ம் தேதி கலந்துகொள்ள வாஞ்சிக்கிறேன். டிசம்பர் 11-ம் தேதி விசாகப்பட்டினம் நகரில் நமது இயக்கத்தின் சார்பில் நடத்தப்படும் கிறிஸ்துமஸ் விழாவில் கலந்துகொள்ள இருக்கிறேன்.

**தமிழகப் பகுதி ஊழியங்கள்:** டிசம்பர் 19-ம் தேதியிலிருந்து 22 வரை கர்த்தருக்குச் சித்தமானால் தமிழகத்தில் அமையப் பெற்றுள்ள நமது பணித்தளங்களுக்கு விஜயம் செய்து மிஷனரிகளையும், சுதேச ஊழியர்களையும் சந்திக்க இருக்கிறேன். டிசம்பர் 28 முதல் 30 வரை ஒரு மிஷன் ஸ்தாபனத்தின் ஊழியர்களுக்குக் கலாச்சாரம் சார்ந்த ஊழியங்கள் என்ற தலைப்பில் கொடைக்கானலில் பயிற்சிக் கொடுக்க இருக்கிறேன்.

**புதிய நிதிச்செயலர் நியமனம்:** கடந்த 5 வருடங்கள் நிதிச்செயலராக சிறப்பாக பணியாற்றி தன்னுடைய பதவிக்காலத்தை நிறைவு செய்த திரு. எட்வர்ட் சாம் அவர்களை இயக்கமாகப் பாராட்டி நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இயக்கத்தின் புதிய நிதிச்செயலராக பொறுப்பேற்றுள்ள திரு. சாலமோன் ஜெபராஜ் அவர்கள் நவம்பர் முதல் தேதி யிலிருந்து பொறுப்பேற்றுள்ளார்கள். இந்த இருவரையும் உங்கள் ஜெபத்தினால் தாங்குமாறு பட்சமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மிஷனரிகள், சுதேச ஊழியர்கள் பாதுகாக்கப்பட; தைரியமாக சுவிசேஷம் எடுத்துரைக்க அவர்களுக்காக ஜெபித்துக் கொள்வோம்.

*அனைவருக்கும் மனம் கனிந்த கிறிஸ்துமஸ் மற்றும் கிறிஸ்துவை நாயகராகக் கொண்ட புதுவருட வாழ்த்துக்கள்.*

தேவ ஊழியத்தில் தங்கள் சக ஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**

# அவர் தமக்கு சுதந்தரமாக தெரிந்துகொண்ட ஜனம் பாக்கியமுள்ளது

(சங்.33:12)

வேதத்தில், பாக்கியம் - ஆசீர்வாதம் என்ற பதங்கள் மாறிமாறி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவை Blessing என்கிற ஒரே வார்த்தையைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டுப் பகுதிகளில், உலக வாழ்வின் செழிப்பையே ஆசீர்வாதம் என எண்ணத்தோன்றுகிறது (உபா.28:3-6,8). ஆனால் தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவன் தாவீது, தெளிவான ஒரு விளக்கத்தை தருகிறார். இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங்.1:2). தாவீதின் சந்ததியில் வந்த இயேசுகிறிஸ்துவும், மலைபிரசங்கத்தில் தேவனுடைய ராஜ்யத்தை மையமாகக்கொண்டே, ஆசீர்வாதத்தை அருளுகிறார். அத்தனை பாக்கிய வசனங்களும் இதை அடிப்படையாகக்கொண்டே எழுதப்பட்டிருக்கிறது (மத்.5:3-11). ஆண்டவருடைய ஜனத்திற்குக் கொடுத்த கானானின் ஆசீர்வாதங்கள் (உபா.8:7-9), அது உன்னத ஆசீர்வாதங்களுக்கான நிழலாட்டம் மட்டுமே (ஆதி.14:18,19). கானானின் ஆசீர்வாதம் ஆபிரகாமின் சந்ததிக்கு நித்திய சுதந்தரமாக வாக்குப்பண்ணப்பட்டது (ஆதி.17:7,8). அது புதிய எருசலேமை மையமாகக்கொண்டது. பழைய கானானின் ஆசீர்வாதம் பழைய வானம், பழைய பூமி உள்ளளவும் மட்டுமே நிலைக்கும் (உபா.11:18). புதிய எருசலேம் உதயமாகும்போது முந்தின வானமும், முந்தின பூமியும் இல்லாமற்போகும் (வெளி.21:1,2). அதுவே ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணின சுதந்தரபாகமான கானான் தேசம் (சங்.105:8-11)

## கர்த்தரின் சுதந்தரம் ஆபிரகாமின் சந்ததிக்குரியது (கலா.3:29):

ஏதேன் தோட்டத்தில் மனிதனுக்கும் தேவனுக்கும் ஏற்பட்ட உறவின் விரிசல், நித்திய உறவுக்கான ஆண்டவரின் திட்டத்திற்கு காரணமாக அமைந்தது. புதிய ஆரம்பமாக ஆபிரகாமைத் தெரிந்தெடுத்து, ஒரு பரிசுத்த ராஜரீக ஆசாரியக்கூட்டத்தை உருவாக்குவதே அந்த திட்டம் (உபா.7:6). அது கிறிஸ்துவிலே நிறைவு பெறுகிறது (1 பேதுரு 2:9). இந்த பரிசுத்த ஜனம் அநேக வம்சங்களை உள்ளடக்கியதாயிருந்தாலும், ஒரே சந்ததி என்றே தேவன் குறிப்பிடுகிறார் (ஆத்.12:3; 17:7). அந்த சந்ததி கிறிஸ்துவே என்று பவுல் கூறுகிறார் (கலா.3:6). அந்த சந்ததியின் வம்சவரலாறும், ஆபிரகாமில் ஆரம்பித்து தாவீதின் குமாரனாகிய கிறிஸ்துவில் நிறைவு பெறுகிறதை மத்.1:1-ல் காணமுடிகிறது. ஆனால் இந்த தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியில் புறஜாதிகளும் உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற ஆண்டவருடைய இரகசியம் தலைமுறை தலைமுறைக்கும் மறைத்து வைக்கப்பட்டு, பவுல் அப்போஸ்தலனுக்கு வெளிப்படுத்தப்பட்டது (எபே.3:3). புறஜாதியாரும் கிறிஸ்துவின் உடன் சுதந்தரராயிருக்கிறார்கள் என்பதை செயல்படுத்தவே பவுல் புறஜாதிகளின் அப்போஸ்தலனாக நியமிக்கப்பட்டார் (ரோமர் 11:13). பவுல் எழுதும்போது கலா.3:28-ன்படி யூதர், கிரேக்கர், அடிமை, சுயாதீனர், ஆண், பெண் அனைவரும் கிறிஸ்துவில் உடன் சுதந்தரராயிருக்கிறார்கள். இவர்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் அனைவரும், கிறிஸ்துவினுடையவர்கள், ஆபிரகாமின் சந்ததியார் (கலா.3:27,29). புறஜாதியாரும் அவர்களோடே அவர்கள் சந்தானமும் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் (ஏசா.61:9, 65:1,23).

## கர்த்தரின் சுதந்தரம் முன்குறிக்கப்பட்டவர்களுக்குரியது

**(எபே.1:12):**

நாம் உருவாக்கப்படுவதற்கு முன்பதாகவே முன்குறிக்கப்பட்டவர்கள், பேரிடப்பட்டவர்கள் (பிர.6:10), உலகத் தோற்றத்திற்கு முன்னமே ஆயத்தம்பண்ணப் பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரிக்க முன்குறிக்கப்பட்டவர்கள் (மத்.25:34). முன்குறிக்கப்பட்டவர்கள் எவரும் கெட்டுப் போவது பிதாவின் சித்தமல்ல, மாறாக நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்வதே அவரின் சித்தம் (யோ.3:16). கிறிஸ்துவுக்குள்ளாக முன்குறிக்கப்பட்டவர்கள் அனைவரும் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் (எபே.1:4). கிறிஸ்துவும், உலகத்தோற்றத்திற்கு முன்பே நமக்காக முன்குறிக்கப்பட்டு (1பேதுரு 1:20) அடிக்கப்படுவதற்காக தெரிந்துகொள்ளப் பட்டவர் (வெளி.13:8A). நித்தியஜீவனை சுதந்தரிக்க தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்துவுக்குள் முன்குறிக்கப்பட்டவர்கள் என்பதை, பவுல் அழுத்தமாக எடுத்துரைக் கிறார். "கிறிஸ்துவுக்குள்" என்ற பதம் எபே.1:3-13 வசனங்களில் மட்டும் 8 முறையும், நிரூபங்களில் 70 முறையும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. முதலாம் உடன்படிக்கையின் காலத்தில் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைவதற்காக அழைக்கப் பட்டவர்களும்கூட (எபி.9:15), கிறிஸ்துவுக்குள் முன்குறிக்கப்பட்டு பாவமன்னிப்பாகிய மீட்பைப் பெற்றவர்கள் (எபே.1:7), மட்டுமல்ல முத்திரை போடப்பட்டவர்கள் (எபே.1:13; வெளி. 7:4). இவர்கள் தேவனுக்கு சொந்த மானவர்கள், மேலும் அபிஷேகம் பெற்றவர்கள் (2 கொரி.1:21,22). நமது ஆன்மீக மீட்பு முற்றுப்பெறும் நாள்மட்டும் நம்மை பரிசுத்த ஆவியானவர் நடத்தி வருவார் (எபே.4:30) என்பது சத்தியம் (பிலி.1:5). எனவே ஆவியை அவித்துப் போடாதிருங்கள், ஆவியிலே அனலா யிருங்கள் என்று பவுல் எச்சரிக்கிறார்.

## கர்த்தரின் சுதந்தரம் கர்த்தரின் பிள்ளைகளுக்குரியது

**(நீதி.19:14A):**

தேவனுடைய பிள்ளைகள் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவை அறிக்கை செய்து அவரை ஏற்றுக்கொண்டவர்கள். (யோ.1:12). இவர்கள் தேவனால் அதிகாரமும், அங்கீகாரமும் பெற்றவர்கள், விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள் (கலா.3:26). இவர்கள் தேவனாலே பிறந்தவர்கள் (யோ.1:13). ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யதைக் காணமாட்டான் என்று நிக்கொதேமுவுக்கு இயேசு திட்டவட்டமாக கூறியது குறிப்பிடத்தக்கது (யோ.3:3,5). இவர்கள் புதுசிருஷ்டிகள் (2 கொரி.5:17) பரிசுத்த ஆவியினாலே வழிநடத்தப் படுகிறவர்கள் (ரோமர் 8:14). கிறிஸ்துவினு டையவர்கள் தங்களையும், தங்கள் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்தவர்கள் (கலா.5:24). இவர்கள் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்கள் (யோ.17:16), தமக்கு சொந்த ஜனங்களாக தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் (உபா. 14:1A,2). நான் அவனுக்கு பிதாவாயிருப்பேன், அவன் எனக்கு குமாரனாயிருப்பான், அவனைவிட்டு என் கிருபையை விலக்கமாட்டேன் என்று சொல்லப்பட்டவர்கள் (1 நாளா. 17:13). தமது குமாரனாகிய தாவீதுக்கு வாக்குப்பண்ணின நித்தியவீடும், நித்திய ராஜ்யமும், ராஜாசனமும் (2 சாமு.7:16), தேவகுமாரனாகிய கிறிஸ்துவைப்பற்றிய தரிசனமும், தேவனுடைய பிள்ளைகளின் சுதந்தரமுமாகும்.

## கர்த்தருடைய பிள்ளைகள் அவருடைய சுவிகாரபுத்திரர்

**(எபே.1:6):**

தேவன் தம்முடைய தயவுள்ள சித்தத்தின் படியே நம்மை கிறிஸ்து மூலமாய் தமக்கு சுவிகாரபுத்திரராகும்படி

முன்குறித்திருக்கிறார். அவர் பூமியின் கடையாந்தரத்திலிருந்து தமக்கு குமாரரையும் குமாரத்திகளையும் தம்முடைய நாம மகிமைக்கென்று சிருஷ்டித்து, உருவாக்கி, படைத்து, தமது நாமம் தரிக்கப்பட்டு தெரிந்துகொள்ளப்பட்டவர்களே சுவிகாரப்புத்திரர் (ஏசா. 43:6,7). இவர்கள் தம்முடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருக்கும்படி முன்குறிக்கப்பட்டவர்கள் (ரோமர் 8:29). நாமும், சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் முழுமை அடைவதற்கு காத்துக்கொண்டிருக்கிறோம் (ரோமர் 8:25). ஏனெனில் கிறிஸ்து வெளிப்படும்போது, அவர் இருக்கிறவண்ணமாக நாம் அவரை தரிசிப்பதற்கு தகுதியாக, கிறிஸ்துவின் சாயல் நம்மில் உருவாக வேண்டும் (1 யோ. 3:2). கிறிஸ்து நம்மில் உருவாகுமளவும், நமக்காக கர்ப்ப வேதனைப்படுவதாக பவுல் கூறுகிறார் (கலா.4:19). கிறிஸ்துவின் அச்சடையாளங்களை நான் தரித்துக்கொண்டிருக்கிறேன் (கலா.6:17) என்ற பவுலின் சாட்சி நமக்கு மாதிரியும், எச்சரிப்புமாக அமைகிறது. நாம் கிறிஸ்துவின் சாயலைத் தரித்த சுவிகாரப் புத்திரராயிருந்தால் தேவனோடு சுதந்தரரும், கிறிஸ்துவோடு உடன் சுதந்தரர் என்பதையும்; பவுல் தெளிவுப்படுத்துகிறார். (ரோமர் 8:17). மாம்சமும், இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை. அழிவுள்ளதும், அழியாமையை சுதந்தரிப்பதில்லை (1கொரி.15:50). வானவருடைய சாயலை நாம் அணிந்துகொள்வோம், அவருடைய சுதந்தரத்தில் பங்கடைவோம்.

## சுவிகாரப்புத்திரர் சிலாக்கியம் பெற்றவர்கள் (ரோமர் 8:15):

கிறிஸ்துவின் குடும்பத்தில் பிறந்தவர்கள் இனி அந்நியரும், பரதேசிகளுமாயிராமல் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாருமாயிருக்கிறோம் (எபே.2:19). தேவன் நம்மை, ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு தகுதிப்படுத்தி தம்முடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தியிருக்கிறார் (கொலோ. 1:12,13). அப்பா பிதாவே என்று அவரை கூப்பிடும் புத்திர சுவிகாரத்தின் சிலாக்கியத்தையும் கிறிஸ்து மூலமாக தேவனுடைய சுதந்தரத்தையும் பெற்றிருக்கிறோம் (கலா.4:6,7). ரோம குடியுரிமையை பெரும் சிலாக்கியமாக எண்ணப்பட்ட காலங்கள் இருந்தது. பவுலும் இந்த சிலாக்கியத்திற்குரியவனாக பிறந்தவர் (அப்.22:27,28). நாமோ பரலோக குடியுரிமைப் பெற்றவர்கள் (பிலி.3:20). நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் (எபே.1:3). கிறிஸ்து, பிதாவின் சிங்காசனத்தில் அவரோடேகூட உட்கார்ந்ததுபோல ஜெயம் பெற்றவர்களாகிய நாமும் கிறிஸ்துவுடன் சிங்காசனத்தில் அமரும் வாய்ப்பைப்பெற்றிருக்கிறோம் (வெளி.3:21). J.J. Packer என்ற புகழ்பெற்ற இறையியலாளர் கூறுகிறார்: கிறிஸ்துவுக்குள் தத்தெடுக்கப்படுதல், சுவிசேஷத்தின் மூலம் நமக்கு கிடைத்த மிகப்பெரும் சிலாக்கியம். ரோம குடியரசை பேரரசாக மாற்றிய அகஸ்டஸ் சீசர், ஜூலியஸ் சீசருடைய மருமகளின் மகன், அவரால் தத்தெடுக்கப்பட்டவர். இவருடைய இயற்பெயர் ஆக்டேவியஸ். ஜூலியஸ் சீசர் கொலை செய்யப்பட்டபோது (மார்ச் 15, 44 B.C), இவர் முடிசூட்டப்பட்டு புகழ்பெற்ற பேரரசரானார்.

இஸ்ரவேல் ஜனங்களின் மீட்பின் அதிபதி மோசேயும், வெளியே எறிந்துவிடப்பட்ட பிள்ளை (அப்.7:21) பார்வோனுடைய குமாரத்தியால் தத்தெடுக்கப்பட்டவன். அரண்மனை சிலாக்கியங்களைப் பெற்றிருந்தும், அநித்தியமான பாவசந்தோஷங்களை வெறுத்து, தேவனுடைய பிள்ளைகளோடு பாடனுபவிப்பதையே தெரிந்துகொண்டவர் (எபி.11:25,26). நாமும் கிறிஸ்துவோடு பாடுபட்டால் அவரோடு ஆளுகையும்

செய்வோம் (2 தீமோ.2:12). கர்த்தரை தெய்வமாகக்கொண்ட ஜனமும் அவர் தமக்கு சுதந்தரமாக தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது. நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், நாம் அவரை தெரிந்துகொண்டிருக்கிறோமா? யூதாஸ் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவன், ஆனால் அவன் தேவனைத் தெரிந்து கொள்ளவில்லை. பரலோகத்தில் இஸ்ர வேலின் 12 கோத்திரங்களை நியாயம் விசாரிக்கும் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பாக்கியத்தை இழந்துபோனான் (மத்.19:28). ஏசாவும் கர்த்தருடைய சுதந்தரத்தை அசட்டைப்பண்ணி இஸ்ர வேல் காணியாட்சிக்கு புறம்பாக்கப்பட்டான் (எபி.12:16). இந்த திருஷ்டாந்தங்கள் நமக்கு எச்சரிப்பு உண்டாக எழுதப்பட்டிருக் கிறபடியால், பரலோகத்திலே காக்கப் பட்டிருக்கிற நித்திய சுதந்தரத்தை இழந்து போகாதிருப்போமாக (1 பேதுரு 1:5)

### கிறிஸ்துமஸ் நமது சுதந்திரத்தின் நன்னாள்:

இராஜரீக ஆசாரியக்கூட்டமாக தெரிந்து கொள்ளப்பட்ட நாம் இந்த உலகத்தில் சுதந்திரமற்றவர்கள் (எண்.18:20), ஏனெனில் நாம் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்கள். நம்முடைய சுதந்திரம் வாக்குப்பண்ணப்பட்டது, கிறிஸ்துவில் உறுதிசெய்யப்பட்டது. அந்த சுதந்திரத்தை நாம் பெற்றுக் கொள்வதற்காகவே பிதா தமது குமாரனை சுமார் 2000-ம் ஆண்டுகளுக்கு முன்பதாக அனுப்பியிருக்கிறார். கிறிஸ்துவில், கிறிஸ்துவுக்காக வாழ்ந்து இந்த கிறிஸ்துமஸ் நாட்களில், நாம் கிறிஸ்துவோடு உடன் சுதந்திரர் என்ற நற்செய்தியை அறிக்கை செய்வோம், அறிவிப்போம்!

**- டாக்டர். வேதராய்,**
*கௌரவ விரிவுப்பணி செயலர், நெய்யூர்.*



முனைவர். எட்வர்ட் ராஜா
(1948-2023)

# நினைவலைகளும், நிஜவார்த்தைகளும்

கர்த்தருக்கு வைராக்கியத்தின் வைர சுருக்கமாக, இரக்கத்தை இதயத்திலே கொண்டவராக, அர்ப்பணிப்பின் அடையாளமாக, மக்களை நேசிப்பதில் நிகரற்றவராக இருந்த முனைவர். எட்வர்ட் ராஜா தென்தமிழகத்தின் விருதுநகர் மாவட்டத்தில் ஏழாயிரம் பண்ணை சிற்றூரில் 1948-ம் ஆண்டு ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் உதித்தார். பால பருவத்திலிருந்தே வேத வசனங்களைக் கற்றுத் தேர்ந்து விசுவாசத்தில் வளர்ந்தவர் தன்னுடைய இளங்கலை, முதுகலை அறிவியல் படிப்புக்களை கோயம்புத்தூர் மற்றும் மதுரை பல்கலைக்கழகங்களில் முடித்து கோயம்புத்தூர் விவசாய பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றார். பின்னர் பெங்களூரிலுள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் நிலம் மற்றும் மண் பரிசோதனை

விஞ்ஞானியாக தன் பணியை 1957-ம் ஆண்டு தொடங்கி 2010 வரை செவ்வனே செய்து அந்த நிலையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றவராக ஓய்வுப் பெற்றார்.

பலரும் பாராட்டும்படி பணி செய்து பணி உயர்வு பெற்றிட வேண்டும்; குடும்பம் கவலையில்லா வாழ்வு வாழ வேண்டும் என்ற நோக்கங்களோடு சென்றுகொண்டிருந்த இந்த விஞ்ஞானியின் வாழ்க்கை 1983-ம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மாநில முகாமில் கலந்துகொண்டபோது மாறிப்போனது. பணத்தை சம்பாதிப்பதைவிட ஆத்துமாக்களை கொள்ளைப்பொருளாக தேவ இராஜ்யத்திற்கு சம்பாதிப்பது ஒன்றே மேலானது என்று உணர்ந்துகொண்டார். 'போ அல்லது அனுப்பு' என்ற நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தாரக மந்திரத்தை தன்னுடையதாக்கியவர் வசிக்கின்ற இடத்திலே சிறு ஜெபக்குழு ஒன்றை ஆரம்பித்து ஊழியத்தில் தன் பங்கை உறுதியாக்கினார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் செயற்குழுவில் தெரிவு செய்யப்பட்டு தன் பங்கு ஊழியங்களை நிறைவேற்றியவர், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் உபத் தலைவராக ஏகமனதாக தெரிந்தெடுக்கப்பட்டார்.

விவசாயத்தின் புதுமைகளை விசுவாசிகள் தெரிந்துகொள்ள வேண்டும், அவர்தம் பொருளாதாரம் மேம்படவேண்டும் என்ற சீரிய சிந்தையோடு நம் பணித்தளங்களுக்குப் பயணித்து விசுவாசிகளுக்கு ஒட்டு முறை விவசாயம், கால்நடை வளர்ப்பில் புது முறைகள் பற்றி கற்றுக்கொடுத்தார். தான் படித்தவைகள், ஒரு விஞ்ஞானியாக கண்டுபிடித்தவைகள், பிற பகுதிகளில் பயன்படுத்தப்படும் விவசாயத் தொழில் நுட்பங்கள் இவை அனைத்தையும் நம் விசுவாசிகளுக்கு கொண்டு சேர்க்கும் பணியில் அதிக பயணங்கள் மேற்கொண்டார். அவரின் தீவிர ஜெபம், ஆறுதலான வார்த்தைகள், தெய்வ பக்தி, நல்லொழுக்கம் அநேகருடைய வாழ்க்கையில் பலமாக, செல்வாக்குமிக்கவைகளாக இருந்திருக்கின்றன என்றால் மிகையாகாது. அவரின் ஓய்வறியா உழைப்பின் பலனாக பெங்களூர் மாநகரில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மூலமாக தொழில் முனைவோர் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டு ஊழியத்திற்கு உதவ ஆரம்பித்தனர்.

புற்றுநோயினால் பீடிக்கப்பட்டு அதனை மேற்கொள்ள தீவிர சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்த வேளையில் அவரது இறுதி நாட்கள் ஜெபத்தினாலும், துதி நன்றிகளினாலும், அமைதியான தியானத்தினாலும் நிறைந்திருந்தன. 2023-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25-ம் நாள் அவர் தேவனுடைய இராஜ்யத்தின் பரம இளைப்பாறுதலுக்குள் எடுத்துக்கொள்ளப்பட்டார். நவம்பர் 9-ம் தேதி பெங்களூர் மாநகரில் நடைபெற்ற அவரது நினைவு ஆராதனையில் அவர் உண்மையான தேவ ஊழியன் என்பதும், இயேசுவின் இராஜ்யக் கட்டுமானப் பணியில் ஓர் விசுவாச வீரன் என்பதும், திருச்சபை, மிஷன் மற்றும் சமுதாயம் ஆகியவற்றில் அவரின் தாக்கமும் அநேகருடைய சாட்சிகளால் வெளிப்பட்டது. அவரின் எளிய வாழ்வு முறை, தாழ்மை, தியாகம், கீழ்ப்படிதல், ஊழிய வாஞ்சை மற்றும் அர்ப்பணிப்பு எப்போதும் நினைவுகூரத்தக்கது. அவரைப்போல தங்களை தகுதிப்படுத்திக்கொள்ள அவர் நடந்த கால் தடத்தில் நடக்க நிறைய பேர் தங்களை அவரது நினைவு ஆராதனையில் அர்ப்பணித்துக்கொண்டனர்.

அவர் நம்மிடையே விட்டுச்சென்றுள்ள முன்னுதாரணங்களைப் பின்பற்ற உறுதியெடுத்து அவரின் துணைவியார் திருமதி. ரத்னமாலா மற்றும் அவரது இரு பிள்ளைகள் திரு. ஸ்டீபன் பிரதீப், டாக்டர். சைமன் முத்துராஜ், இவர்களின் மனைவிகள் மற்றும் குழந்தைகளின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**அருட்திரு. விஜய் பிரசன்னா ஐசக்**

டிவிஷனல் செயலர், தென்னிந்திய விரிவுப்பணி.

# நிதிக்காவலரிடமிருந்து...

அன்பிற்கினிய ஊழிய பங்காளர்களே!

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு என்ற இந்த மாபெரும் ஊழிய ஸ்தாபனத்திற்கு ஊக்கமான ஜெபத்தினாலும் உவகையான காணிக்கைகளினாலும் தாங்கள் நல்கிவரும் இந்த ஆதரவுக்கு எப்போதும் நன்றி சொல்ல கடமைப்பட்டவனாக இருக்கிறேன். கடந்த நிதியாண்டு நமது ஊழியத்தின் எல்லாவித தேவைகளையும் சந்தித்து நம்மை நடத்தின தேவனுக்கு கோடானகோடி ஸ்தோத்திரம். ஊழியத்தின் முழுமையை நோக்கிய நமது பயணத்தில் அநேக சவால்களை நாம் சந்திக்க வேண்டியதாக இருக்கிறது. வரம்புகள் மீறாமல் இதுவரை நடந்துவந்த பாதையினை நோக்கும்போது இது கர்த்தரின் முழுமுதல் கிருபை என்பதை உணருகிறோம்.

இயக்கத்தின் 2022-2023-ம் ஆண்டின் வரவு செலவு கணக்குகளை நிர்ணயிக்கப்பட்ட சமயத்திற்குள்ளாக தணிக்கைக்கு உட்படுத்தி அதின் நிதிநிலை அறிக்கையினை செப்டம்பர் திங்கள் 23-ம் தேதி கூடிய செயற்குழுவிலும், 24-ம் தேதி கூடிய பொதுக்குழுவிலும் தாக்கல் செய்ய தேவன்தாமே உதவினார்.

உங்கள் தனிப்பட்ட பார்வைக்காக ஆடிட்டரால் தணிக்கை செய்யப்பட்டு சான்றளிக்கப்பட்ட 2023-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை இந்த இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்படும் புது சட்டதிட்டங்களை கைக்கொள்வதில் பல சிரமங்களை எதிர்கொள்கிறோம். இந்த சவால்களை எதிர்கொள்ள தேவ பலன், ஞானம் அருளப்பட ஜெபிக்குமாறு உங்களை வேண்டுகிறோம்.

FCRA எனப்படுகிற வெளிநாட்டு பண உதவிகள் கண்காணிக்கும் அமைப்பில் நமது இயக்கம் 2010-ம் ஆண்டே பதிவுச் செய்யப்பட்டுள்ளது. இந்த பதிவினை நீட்டித்து ஒப்புதல் வழங்குமாறு இயக்கம் கொடுத்த வேண்டுகோள் டிசம்பர் 2021-ல் இருந்து இன்னும் நிலுவையில் உள்ளது. இருந்தாலும் 2024 மார்ச் மாதம் வரை தற்காலிகமாக இந்த பதிவினை அரசாங்கம் நீட்டித்திருக்கிறது. இந்த பதிவு நிரந்தரமாகி நமது இயக்கத்திற்கு கிடைக்க ஜெபித்துக்கொள்ளுங்கள்.

நம்முடைய தினசரி ரொக்க பண வரவு செலவுகளில் அரசாங்கம் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. நம் ஊழியத்திற்கு பணம் அனுப்புகின்ற இயக்கத்தின் ஜெபவீரர்கள் ரொக்க பண பரிமாற்றத்தை தவிர்த்து இணைய வழி பணப்பரிமாற்றம் செய்ய பட்சமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நிதித்துறையில் பணியாற்றும் மிஷனரிகள், தன்னார்வலர்கள் மற்றும் உதவியாக பணி செய்பவர்கள் அனைவரும் சிறப்பாக மற்றும் இயக்கத்தின் எதிர்பார்ப்பிற்கிணங்க பணியாற்ற தேவ ஞானம், சுகபெலன் ஆகியவற்றால் நிரப்பப்பட ஜெபித்துக்கொள்ளுங்கள்.

*அனைவருக்கும் குதூகலமான கிறிஸ்துமஸ் மற்றும் மகிழ்ச்சியான புதுவருட வாழ்த்துக்கள்!*

கிறிஸ்துவின் உன்னதப் பணியில்,



**CA. L. நெல்சன்**
நிதிக்காவலர்

J S A S & Associates
Chartered Accountants

## INDEPENDENT AUDITOR'S REPORT ON FINANCIAL STATEMENTS

To
The Members of
M/S. FRIENDS MISSIONARY PRAYER BAND

**Report on the Financial Statements:**
We have audited the Financial Statements of M/S. FRIENDS MISSIONARY PRAYER BAND, 29, High School Road, Ambattur, Chennai – 600 053 ("the Society"), which comprise of Balance Sheet as at 31st March 2023, the Income & Expenditure account and the Receipts and Payments account for the year ended 31st March 2023 and the notes to the financial statements consisting of summary of significant accounting policies.

In our opinion and to the best of our information and according to the explanations given to us,

> Subject to our "Observations on Financial Systems and Statements" attached to this Report, these Financial Statements of accounts of **M/S. FRIENDS MISSIONARY PRAYER BAND** give a true and fair view of the financial position of the Society as at 31st March 2023 and of its financial performance for the year then ended in accordance with the Accounting Standards issued by the Institute of Chartered Accountants of India (ICAI).

**Basis for Opinion:**
We have conducted our audit in accordance with Standards on Auditing (SAs) issued by the Institute of Chartered Accountants of India. Our responsibilities under those standards are further described in the *Auditor's Responsibilities for the Audit of the Financial Statement* section of our report. We are independent of the "M/s. Friends Missionary Prayer Band, Chennai" in accordance with the Code of Ethics issued by the ICAI, and have fulfilled our other ethical responsibilities in accordance with the Code of Ethics. We believe that the audit evidence we have obtained is sufficient and appropriate to provide a basis for our opinion.

**Responsibilities of Management and those charged with Governance for the Financial Statement:**
Management is responsible for the preparation and fair presentation of these financial statements that give a true and fair view of the state of affairs and results of operations in accordance with the accounting principles generally accepted in India. This responsibility includes the design, implementation and maintenance of internal control relevant to the preparation and presentation of these Financial Statements that give a true and fair view and are free from material misstatement, whether due to fraud or error.

J S A S & ASSOCIATES * CHARTERED ACCOUNTANTS * FRN 014859S Chennai-40

Old No.: 92/7, New No.:46/7, 3rd Floor, T-Block (T-92) 5th Main Road, Annanagar, Chennai - 600 040.
Tel.: 044-4855 1833, 044-2626 3800, E-mail : office.jsas@gmail.com

In preparing the financial statements, management is responsible for assessing the entity's ability to continue as a going concern, disclosing, as applicable, matters related to going concern and using the going concern basis of accounting unless management either intends to liquidate the entity or to cease operations, or has no realistic alternative but to do so.

Those charged with governance are responsible for overseeing the Organization's financial reporting process.

**Auditor's Responsibilities for the Audit of the Financial Statement:**
Our objectives are to;

1. Obtain reasonable assurance about whether the financial statements as a whole is free from material misstatement, whether due to fraud or error, and to issue an auditor's report that includes our opinion. Reasonable assurance is a high level of assurance, but is not a guarantee that an audit conducted in accordance with Standards on Auditing (SAs) will always detect a material misstatement when it exists. Misstatements can arise from fraud or error and are considered material if, individually or in the aggregate, they could reasonably be expected to influence the economic decisions of users taken on the basis of these financial statements.

   As part of an audit in accordance with SAs, we exercise professional judgment and maintain professional scepticism throughout the audit. Identify and assess the risks of material misstatement of these Financial Statements, whether due to fraud or error, design and perform audit procedures responsive to those risks, and obtain audit evidence that is sufficient and appropriate to provide a basis for our opinion. The risk of not detecting a material misstatement resulting from fraud is higher than for one resulting from error, as fraud may involve collusion, forgery, intentional omissions, misrepresentations, or the override of internal control.

2. Obtain an understanding of internal control relevant to the audit in order to design audit procedures that are appropriate in the circumstances, but not for the purpose of expressing an opinion on the effectiveness of the entity's internal control.

3. Evaluate the appropriateness of accounting policies used and the reasonableness of accounting estimates, if any, and related disclosures made by management.,

4. Evaluate the overall presentation, structure and content of these Financial Statements, including the disclosures, and whether these Financial



Statements represent the underlying transactions and events in a manner that achieves fair presentation.

5. We have communicated with those charged with governance regarding, among other matters, significant audit findings, including any significant deficiencies in internal control that we identified during our audit.

Our responsibility is to express an opinion on these Financial Statements based on our audit. We conducted our audit in accordance with the Standards of Auditing (SA) as prescribed by the Institute of Chartered Accountants of India (ICAI). These Standards require that we comply with ethical requirements and plan and perform the audit to obtain reasonable assurance about whether these financial misstatements.

An audit involves performing procedures to obtain audit evidence about the amounts and disclosures in these Financial Statements. The procedures selected depend on the auditor's judgment, including the assessment of the risks of material misstatement, of these Financial Statements, whether due to fraud or error. In making those risk assessments, the auditor considers the internal control relevant to the entity's preparation and fair presentation of these Financial Statements in order to design audit procedures that are appropriate in the circumstance, but not for the purpose of expressing an opinion on the effectiveness of the entity's internal control. An audit also includes evaluating the appropriateness of the accounting policies used and the reasonableness of the accounting estimates made by the management, as well as evaluating the overall presentation of these financial statements.

We believe that the audit evidence we have obtained is sufficient and appropriate to provide a basis for our audit opinion.

For J S A S & Associates
Chartered Accountants
(FRN. 014859S)

John Ravindran Moses
Partner
(Mem. No. 028566)
UDIN : 23028566BGXTVR7013

Place: Chennai
Date: 23.09.2023

# FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

## RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2023

| RECEIPTS | 2022 - 2023 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. | PAYMENTS | 2022 - 2023 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| **FOREIGN CONTRIBUTION A/C RECEIPTS** | | | **FOREIGN CONTRIBUTION A/C PAYMENTS** | | |
| To Bank Interest | 1,68,621 | 20,74,975 | **Programme Expenses:** | | |
| To FD Interest | 33,70,062 | - | By Calamity Relief Expenses | 1,12,500 | - |
| To Donation Calamity Relief | 5,01,217 | 10,97,719 | By Church Maintance Support | 17,56,396 | - |
| To Donation children home maintenance | 2,43,14,028 | 80,11,725 | By Community Dev Educational Exp. | 24,03,686 | - |
| To Donation Christmas Gift | 1,27,632 | 15,500 | By Community Dev Child Care Expenses | 7,28,481 | 16,50,102 |
| To Donation - Church Expenses | 35,97,241 | 2,94,127 | By Community Dev Project Medical Care | 5,63,533 | 67,392 |
| To Donation - Community Dev. Camps | 29,72,632 | 1,40,410 | **Administration Expenses:** | | |
| To Donation Community Dev - Child Care | 13,14,752 | 8,85,728 | By Bank Charges | 40,438 | 18,976 |
| To Donation General | 6,16,063 | 1,13,088 | By Christmas Gift | - | - |
| To Donation HR Study Scholarship | 5,98,150 | - | By Salary & Allowances | - | 2,06,397 |
| To Donation Community Dev - Education | 1,22,27,485 | - | By Evangelist & Volunteers | - | 19,955 |
| To Donation Medical | 95,83,630 | 22,32,738 | By Repairs & Renewals | 6,552 | - |
| To Donation - Monthly Pledge | 48,08,002 | 39,03,094 | By Meeting Expenses | 37,500 | 21,580 |
| To Donation Music & Media | - | 1,03,651 | By Staff Medical Expenses | 29,19,137 | 26,14,470 |
| To Donation Training & Development | 10,74,200 | 6,00,011 | | | |
| | | | **Fund payments:** | | |
| **Fund Receipts:** | | | By Building Fund | - | 96,82,069 |
| To Building Fund | - | 1,03,43,072 | | | |
| | | | **DOMESTIC PAYMENTS** | | |
| **DOMESTIC RECEIPT** | | | **Programme Expenses:** | | |
| To Bank Interest | 17,62,996 | 3,18,46,943 | By Calamity Relief Expenses | 20,000 | 1,00,000 |
| To Fixed Deposit Interest | 1,79,99,128 | - | By Gift to CM Fund | - | 5,00,000 |
| To Donation - Annual Meet | 63,04,377 | 82,012 | By Children Education Expenses | 1,87,84,542 | 1,08,50,396 |
| To Donation - Calamity Releif | 2,60,410 | 9,23,707 | By Children HR Study Scholarship Exp | 70,88,812 | 62,10,898 |
| To Donation - Children Home Maintenance | 21,03,221 | 24,98,196 | By Christmas Gift | 3,34,44,210 | 2,92,25,909 |
| To Donation - Christmas Gift | 3,91,85,173 | 3,53,75,458 | By Church Expenses Support | 6,44,32,924 | 6,23,92,138 |

Friends Missionary Prayer Band * 29, High School Road, Ambattur, Ch-53 *

ISAS & ASSOCIATES * CHARTERED ACCOUNTANTS * FRN 014809S Chennai-40

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

### RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2023

| RECEIPTS | 2022 - 2023 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. | PAYMENTS | 2022 - 2023 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| To Donation - Church Expenses | **6,02,98,571** | 6,09,99,160 | By Community Dev Camp Expenses | | |
| To Donation Community Dev - Camp | **1,34,16,296** | 90,77,432 | Training & Development | **70,29,044** | 30,68,003 |
| To Donation Community Dev - Child Care | **15,51,65,087** | 14,44,53,893 | Community Dev Camp Exp | **6,01,57,270** | 6,01,73,668 |
| To Donation - Community Dev. Education | **24,42,243** | 28,46,900 | Linguistic Work | **5,84,060** | 70,500 |
| To Donation - Community Dev. Health | | | By Community Development Expenses | | |
| Care | **3,21,830** | 2,18,890 | Medical care | **22,59,204** | 20,00,200 |
| To Donation Field Equipment | **11,97,987** | 2,93,336 | Child Care Expenses | **14,66,89,934** | 9,60,04,708 |
| To Donation - Adult Literacy | **12,000** | 1,440 | Educational Exp. | **5,50,642** | 6,55,196 |
| To Donation - Linguistic Work | **5,61,490** | 7,09,829 | Vocational Training Expenses | **31,57,475** | 8,39,348 |
| To Donation for Travel | **-** | 5,360 | Adult Literacy | **5,30,935** | 5,34,943 |
| To Donation General | **5,03,16,880** | 5,19,11,023 | By General, Hospitality & Maintenance | | |
| To Donation H.Q. Building | **30,87,257** | 2,10,000 | Mission Field | **58,25,797** | 41,44,699 |
| To Donation HR Study Scholarship | **14,24,671** | 14,91,383 | Others | **98,340** | 2,05,732 |
| To Donation Medical | **69,16,928** | 1,64,18,888 | By Medical Expenses | | |
| To Donation - Monthly Pledge | **36,13,95,994** | 33,58,62,537 | Mission Field | **90,42,476** | 1,30,80,574 |
| To Donation - Music & Media | **5,56,841** | 2,93,130 | By Meeting Expenses | | |
| To Donation Navodaya Meetings | **12,500** | - | Mission Field | **9,68,549** | 2,39,497 |
| To Donation through Field congregation | **44,13,000** | - | Annual Meet Expenses | **53,97,285** | 1,30,358 |
| To Donation - Training & Development | **44,24,314** | 34,15,572 | By Postage & Courier | | |
| To Donation - Vehicles | **36,56,475** | 29,45,106 | Mission Field | **2,20,881** | 2,90,898 |
| To Donation - Vocational Training | **11,000** | 24,600 | Magazine postage | **30,02,237** | 22,06,360 |
| To Miscellaneous Income | **1,46,885** | 1,49,656 | By Printing & Stationary | | |
| To Sale of Vehicles | **3,37,735** | 44,500 | Mission Field | **6,07,560** | 4,94,632 |
| To Interest on Income Tax Refund | **1,26,590** | 55,251 | Magazine Printing | **1,39,16,828** | 83,71,055 |
| | | | By Promotional Material Expenses | **83,19,547** | 57,04,908 |
| **Fund Receipts:** | | | By Rent & Rates | | |
| To Appollo Education Project Fund | **6,350** | 6,600 | Mission Field | **95,65,378** | 1,03,68,256 |
| To Benevolent Fund | **6,20,849** | 12,97,810 | By Repairs & Renewals | | |

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

**RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2023**

| RECEIPTS | 2022 - 2023 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. | PAYMENTS | 2022 - 2023 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| To Building Fund | 52,500 | 23,38,728 | Mission Field | 42,20,719 | 77,40,671 |
| To Capital Fund | - | 3,10,83,357 | By Salary & Allowances | | |
| To Children Hr Studies Scholarship Fund | 5,62,750 | 5,77,200 | Mission Field | 9,52,74,533 | 11,70,61,599 |
| **To Pension Fund** | 5,22,000 | 80,66,504 | By Staff Higher Study Expenses | 1,64,706 | 3,41,190 |
| To Endowment Fund Child Sponsorship | 5,00,000 | 4,43,000 | By Telephone & Trunk Calls | | |
| To Endowment Fund Children Home | 400 | 34,600 | Mission Field | 22,15,581 | 23,05,288 |
| To Endowment Fund People Group | - | 8,00,000 | By Travelling Expenses | | |
| To Endowment Fund Missionary Support | - | 63,920 | Mission Field | 1,82,96,200 | 1,24,80,306 |
| To Endowment Fund - Magazine Life | | | By Vehicle Maintenance | | |
| Subscribtion | - | 19,450 | Mission Field | 1,34,24,985 | 1,21,12,129 |
| By Endowment Missionary Children Hr | | | **Administration Expenses:** | | |
| Study | 3,90,750 | - | By Audit Fees & Other Expenses | 1,35,700 | 1,18,000 |
| To Staff Benefit Fund | 1,13,150 | 1,16,240 | By Bank Charges | 2,50,710 | 2,30,311 |
| To S B F Loan Recovery | - | 1,61,560 | By Contribution To EPF | 1,92,52,464 | 2,68,03,761 |
| **Current Liabilities:** | | | By EPF Damages | 4,93,86,821 | - |
| To Contribution To Impact | 21,200 | - | By FBF Gift | 8,21,405 | 21,12,200 |
| | | | By General, Hospitality & Maintenance | 90,43,625 | 33,87,855 |
| To FPF Loan Recovery | 40,320 | 96,890 | By Gratuity | 83,84,522 | 61,60,433 |
| To TDS Payable | - | 5,765 | By Interest Payable to EPF | 73,61,572 | 76,12,665 |
| | | | By Legal Fees | 4,28,085 | 3,89,765 |
| **Property, Plant & Equipment:** | | | By Medical Expenses | 58,01,817 | 86,84,794 |
| To Sale of Property land | - | 28,00,000 | By Meeting Expenses | 35,62,881 | 14,31,332 |
| | | | By Office Maintenance | 30,04,321 | 27,19,614 |
| **Investments:** | | | By Pension Expenses | 1,15,66,507 | 90,75,730 |
| To Endowment Fund Deposit - Life Member | 1,50,681 | - | By Postage & Courier | 25,28,968 | 22,38,342 |
| To Endowment Fund Deposit Missionary | | | By Printing & Stationary | 60,13,869 | 53,81,300 |
| Support | - | 22,42,198 | By Rent & Rates | 2,65,16,182 | 2,54,25,759 |
| To Endowment Fund Deposit Misy Children | | | By Repairs & Renewals | 39,80,211 | 27,34,346 |
| HR Study | - | 11,30,649 | By Salary & Allowances | 5,45,67,915 | 3,75,38,758 |
| To Fixed Deposit Earmarked | - | 11,20,33,265 | By SBF Gifts | 1,73,940 | 1,48,355 |

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

**RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2023**

| RECEIPTS | 2022 - 2023 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. | PAYMENTS | 2022 - 2023 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| | | | By Subscription To Other Missions | 26,500 | - |
| **Loans & Advances:** | | | By Taxes & Insurance | 5,81,438 | 9,35,868 |
| To Advance To Staff for EPF Payment | 3,95,212 | - | By Taxes & Rates | 3,42,547 | 1,87,428 |
| To Staff Benefit Fund Loan | 2,15,800 | - | By Telephone & Trunk Calls | 11,42,328 | 11,51,376 |
| | | | By Travelling Expenses | 41,98,104 | 23,83,939 |
| To TDS Receivable | 15,25,319 | 6,90,639 | By Vehicle Maintenance | 19,30,218 | 17,91,581 |
| | | | By Staff Welfare | | |
| | | | Holiday Allowance | 13,33,785 | 23,14,523 |
| | | | Warm Cloth Allowance | 22,98,985 | 24,06,600 |
| | | | Staff Welfare - General | 36,86,445 | 17,38,798 |
| | | | **Fund Payments:** | | |
| | | | By Building Fund | - | 42,76,585 |
| | | | By Childcare Fund | - | 1,68,61,801 |
| | | | By Jeevandhara Fund | - | 1,442 |
| | | | By Medical Reserve Fund | - | 9,700 |
| | | | By S B F Loan Recovery | 1,61,560 | - |
| | | | By Endowment Fund Missionary Suport | 56,000 | - |
| | | | By Endowment Fund Magazine Life Subscription | 23,400 | - |
| | | | **Current Liabilities:** | | |
| | | | By Employees Provident Fund | 2,74,151 | 46,10,039 |
| | | | By Interest Payable to EPF | - | 1,00,43,941 |
| | | | By Payable To Staff for Marriage | 2,72,700 | 1,74,600 |

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

**RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2023**

| RECEIPTS | 2022 - 2023 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. | PAYMENTS | 2022 - 2023 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| | | | By Earnest Money Deposit | 72,000 | - |
| | | | By FPF | - | 44,20,030 |
| | | | By Contribution To Impact | - | 1,600 |
| | | | By TDS Payable | 1,17,170 | - |
| | | | **Property, Plant & Equipment:** | | |
| | | | By Assets Purchased | 6,16,85,943 | 3,90,25,823 |
| | | | **Investments:** | | |
| | | | By Building Fund Deposit | 3,54,696 | 2,39,942 |
| | | | By Endowment Fund Deposit - Life Mem. Publicity | - | 22,336 |
| | | | By Endowment Fund Deposit - Child Sponsorship | 8,78,177 | 2,92,934 |
| | | | By Endowment Fund Deposit - People Group | 1,24,282 | 8,51,910 |
| | | | By Endowment Fund Deposit Missionary Children Hr Study | 4,00,070 | - |
| | | | By Endowment Fund Deposit - Missionary Support | 5,54,940 | - |
| | | | By Magazine Life Subscription | 1,24,603 | - |
| | | | By Fixed Deposit Earmarked | 1,23,17,774 | - |
| | | | By Fixed Deposit General | 6,61,822 | 13,27,11,429 |
| | | | **Loans & Advances:** | | |
| | | | By Advance to Staff for EPF Payment | - | 82,36,756 |
| | | | By Staff Benefit Fund Loan | - | 1,80,000 |

K. Nelson

Friends Missionary Prayer Band * 29, High School Road, Ambattur, Ch-53 *

JSA & ASSOCIATES * CHARTERED ACCOUNTANTS * FRN 014859S Chennai-40

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

### RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2023

| RECEIPTS | 2022 - 2023 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. | PAYMENTS | 2022 - 2023 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| | | | By Project Advance Recoverable (Net) | 87,19,957 | 1,13,85,745 |
| | | | By TDS Receivable | - | 12,36,630 |
| Sub Total | 80,82,48,874 | 89,59,78,412 | Sub Total | 85,89,79,988 | 87,38,71,674 |
| | | | | | |
| **To Opening Balance** | | | **By Closing Balance** | | |
| To Cash at Bank A/c | 4,14,12,244 | 1,98,04,064 | By Cash At Bank A/c | 1,19,85,086 | 4,14,12,244 |
| To Cash at Bank church A/c | 41,49,299 | 45,49,726 | By Cash At Bank Church A/c | 27,48,779 | 41,49,299 |
| To Cash at Bank fcr A/c | 1,13,73,262 | 1,58,45,955 | By Cash At Bank FCR A/c | 14,81,594 | 1,13,73,262 |
| To Cash at Bank Field A/c | 42,24,281 | 50,85,080 | By Cash At Bank Field A/c | 17,000 | 42,24,281 |
| To Cash at Bank fund A/c | 1,87,53,592 | 1,30,52,443 | By Cash At Bank Field A/c | 40,67,153 | - |
| To Cash on Hand A/c | 9,69,368 | 4,38,040 | By Cash At Bank Fund A/c | 90,49,451 | 1,87,53,592 |
| | | | By Cash On Hand A/c | 8,01,870 | 9,69,368 |
| TOTAL | 88,91,30,921 | 95,47,53,720 | TOTAL | 88,91,30,921 | 95,47,53,720 |

REFERRED TO IN OUR REPORT OF EVEN DATE
For JSAS & ASSOCIATES
CHARTERED ACCOUNTANTS
FIRM REGN NO : 014859S

Place : Chennai
Date : 23.09.2023

JOHN BERLIN
GENERAL SECRETARY

L.NELSON
TREASURER

JOHN RAVINDRAN MOSES
PARTNER
MEMBERSHIP NO. 028566
UDIN : 23028566BGXTVR7013

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

**BALANCE SHEET AS AT 31 MARCH 2023**

| LIABILITIES | SCH | VALUE AS AT 31-MAR-2023 | VALUE AS AT 31-MAR-2022 | ASSETS | SCH | VALUE AS AT 31-MAR-2023 | VALUE AS AT 31-MAR-2022 |
|---|---|---|---|---|---|---|---|
| **CAPITAL FUND** | 1 | **52,35,81,267** | 45,55,04,338 | **FIXED ASSETS** | 6 | **43,29,56,331** | 40,72,82,507 |
| **OPTION U/S 11(2)** | | - | 7,31,38,199 | **INVESTMENTS** | | | |
| **FUNDS** | | | | Deposits with banks | 7 | **42,37,65,893** | 40,85,00,210 |
| Endowment Funds | 2 | **1,70,65,767** | 1,62,54,017 | **CURRENT ASSETS** | | | |
| Staff Benefits Funds | 3 | **22,71,99,913** | 22,55,42,724 | Loans and Advances | 8 | **7,60,32,778** | 6,47,84,764 |
| Others Funds | 4 | **15,75,99,196** | 15,75,40,346 | TDS Receivable | | **17,83,861** | 31,99,390 |
| **CURRENT LIABILITES** | 5 | **3,97,25,550** | 3,70,71,812 | Security and Caution deposits | | **5,67,840** | 5,67,840 |
| Earnest Money Deposit | | **85,943** | 1,57,943 | Cash in Hand | | **8,01,870** | 9,69,368 |
| TDS Payable | | - | 7,380 | Cash at Bank | | **2,93,49,062** | 7,99,12,678 |
| **TOTAL** | | **96,52,57,636** | 96,52,16,758 | **TOTAL** | | **96,52,57,636** | 96,52,16,758 |

**REFERRED TO IN OUR REPORT OF EVEN DATE**
**For JSAS & ASSOCIATES**
**CHARTERED ACCOUNTANTS**
**FIRM REGN NO : 014859S**

**Place : Chennai**
**Date :** 23.09.2023

**JOHN BERLIN**
**GENERAL SECRETARY**

**L.NELSON**
**TREASURER**

**JOHN RAVINDRAN MOSES**
**PARTNER MEM. NO . 028566**
UDIN: 23028566BGXTVR7013




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. நிஷா மாங்வெய் ஃபோம்
செல்வி. ஜுமோனி மில்லி

# ஹிமாச்சலப் பிரதேசம்

## ரோஹ்ரு:

### ஜாண்சன் சங்கர் & ஜெபராணி

**துதிக்க:** பிரகாஷ் சம்பளத்தை கடந்த ஒரு வருடமாக அவருடைய முதலாளி எந்தவொரு காரணமுமின்றி நிறுத்தி வைத்ததின் மூலம் குடும்பம் பணக்கஷ்டத்தில் தவித்தது. விசுவாசிகள் கூடி ஜெபித்தபோது, மறுநாளே ஒருவருட சம்பளத்தையும் பிரகாஷ் பெற்றுக்கொள்ள தேவன் கிருபை செய்தார். சுபத்ரா மலைப்பாதையில் பயணம் செய்துகொண்டிருந்தபோது கீழே விழுந்து அடிப்பட்டாலும் அருகிலிருந்த பெரிய பள்ளத்தில் விழாதபடி தேவன் காப்பாற்றினார். ரோஷன்லால் விபத்தில் சிக்கி 3 மாதம் வேலையின்றி தவித்தபோது, குடும்பம் ஜெபித்ததினால் ஒரு கடை வைக்கும்படி கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை அறிக்கையிட தயாராக இருக்கும் அஞ்சனா, மீனாட்சி, ரோஷன்லால், சுரஜ் மற்றும் ரோகித் விசுவாசத்தில் பலப்பட; விபத்தில் சிக்கி காயமடைந்திருக்கும் பாபுலாலின் காயங்கள் விரைவில் குணமடையவும், அவர் வேலைக்குச் செல்லவும், மீனாட்சியின் குடும்பத்தில் மாமியார் மருமகள் பிரச்சினை தீர்ந்து சமாதான வாழ்வு வாழ ஜெபிப்போம்.

## ஹிமாச்சல் பிராந்திய அலுவலகம் :

### த்சாங்சே சங்தம் & சுச்சானோ

**துதிக்க:** கடந்த மாதத்தில் 9 நபர்கள் இயேசு கிறிஸ்துவின் அன்பை கண்டு கொண்டனர். 1421 நபர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டு 149 நற்செய்தி பிரதிகளும், 27 புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டதற்காக; மோராங் கிராம தலைவர் நம் ஆலயத்தைப் பார்வையிட்டு, தெரியாத நபர்களை ஆலயத்திற்குள் அனுமதிக்க வேண்டாம் என்று ஆலோசனைக் கூறியுள்ளார்; அவ்வாலயத்திற்கு வந்த கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் நம் ஊழியர்களையும், விசுவாசிகளையும் மிரட்டிவிட்டுச் சென்றுள்ளனர். ஆனாலும், தேவ கிருபையால் தொடர்ந்து ஆராதனை நடைபெறுவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பஹரனு கிராமத்தில் கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் நம் ஊழியத்தை எதிர்ப்பது மாத்திரமல்லாமல், ஆராதனை நடத்த இடம் கொடுத்த நம் விசுவாசியின் குடும்பத்தினரையும் மிரட்டிச் சென்றிருக்கின்றனர். நமது ஊழியர்களையும் துன்புறுத்த திட்ட மிடுகின்றனர். இப்படி கடும் எதிர்ப்புகள் நிலவும் சூழ்நிலையிலும் விசுவாசிகளைப் பிரித்து தனியாக சபை நடத்த வீடு தோறும் செல்லுகின்ற நபர்கள் மனம் மாற ஜெபிப்போம்.

**2**
**டிசம்பர்**
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண்சன் ராஜதுரை
திருமதி. புஸாரே ஷைலா சிந்தாமன்
திரு. தாங்பியாக்முவான், திருமதி. அனாமிகா பெகு

## கர்சோக்:

### பவன் குமார் & பிரபாஷினி தேவி

**துதிக்க:** நான்கு பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் அன்பினை அறிக்கையிட்டனர். பசந்த்பூர் கிராமத்தில் சகோதரி ரிம்பியின் திருமணம் கிறிஸ்தவ முறைப்படி சிறப்பாக நடைபெற்றது. சுஷ்மா மற்றும் சொப்னா தொடர்ந்து ஆலயம் வருகின்றனர். பயத்தினால் விசுவாசத்தில் சற்று பின் மாற்றம் அடைந்திருந்த மீராவின் குடும்பம் மீண்டுமாக கிறிஸ்துவுக்குள் தங்களை நிலைநிறுத்திக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சகோதரி சொப்னாவிற்கு நல்ல வேலை கிடைக்க; அஞ்சு ஆயலம் வர தடையாக இருக்கும் அவரது கணவன் மனம் மாறவும், அவர் குடியினை விடவும்; முதியோர் கல்வி திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட; மிஷனரியின் மகள் ஏஞ்சலுக்கு டேராடூன் பள்ளியில் படிக்க இடம் கிடைக்க ஜெபிப்போம்.

# பஞ்சாப்

### பர்னாலா: பிதன் ஹன்ஸ்தா & பன்சூரி மோஹ்லின்

**துதிக்க:** 2 பேர் கர்த்தரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். வேலையின்றி இருந்த ஹர்பஜன்சிங் தன் கிராமத்தில் இரவு சத்சங் கூடுகை ஏற்பாடு செய்து ஜெபித்த பிறகு நல்ல வேலை கிடைத்துள்ளது. நக்மா ராணி மஞ்சள் காமாலையிலிருந்து சுகமடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தற்கொலைக்கு தூண்டும் தீய ஆவியின் பிடியிலிருந்து தனுலா கிராமத்தின் சந்தீப்சிங் விடுபட; கடந்த 3 வருடங்களாக அசுத்த ஆவியினால் பீடிக்கப்பட்டு படுத்தப்படுக்கையாக இருக்கிற சேக்னா கிராமத்தின் கோபிசிங் குண மடைய; தனுலா கிராமத்தின் ராஜ்சிங் வீடு கட்ட எடுக்கும் முயற்சி கைகூட; தபால் அலுவலகத்தின் வேலைக்கு மனு அளித் திருக்கும் மஹேந்தர்சிங் மற்றும் பாப்லுக்கு வேலை கிடைக்க ஜெபிப்போம்.

## ஜைத்தோ:

### சித்தரஞ்சன் தான்டி & தெஜஸ்விதா

**துதிக்க:** 2 பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். ஜைத்தோ பணித்தளத்தில் சபை மூப்பர்களின் பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்றது. வெளிப்புற நற்செய்தி கூட்டங்களில் 510 நபர்களை சந்தித்து சுவிசேஷ கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டது. சுக்வீர்சிங் மற்றும் ராணி கௌர் ஹெச். ஐ. வி. பாதிப்பிலிருந்து மீண்டுவருகின்றனர். மலாபஸ்தி கிராமத்தின் ப்ரதீப் கௌர் பிரிந்துபோன தனது கணவருக்காக ஆலயம் வந்து ஜெபித்தபோது கணவன் மனந்திருந்தி திரும்ப வீடு வந்து சேர்ந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மகிமாசுவாய் கிராமத்தின் புதிய தொடர்பாளர் குர்ஜான்ட்சிங் பக்கவாத பாதிப்பிலிருந்து குணமடைய; பசக்கானா மற்றும் ஜைத்தோ இனமக்கள் மத்தியில் பணிசெய்ய அர்ப்பணமுள்ள ஊழியர்கள் கிடைக்க; கர்சன்சிங் மற்றும் ராஜ்சிங் கிறிஸ்துவை அறிக்கையிட்டு தங்கள் விசுவாசத்தில் உறுதியாக இருக்க, குழப்புகிறவர்கள் விலகிப்போக; திட்ட மிடப்பட்டுள்ள ஆத்தும ஆதாயப்பயிற்சி முகாமில் சபை மூப்பர்கள், பெண்கள், வாலிபர்கள் உற்சாகமாக கலந்துகொள்ள ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பியூலா அன்ன சாந்தினி பிரைட்

## மோகா:

**ஜஸ்டின் & சாராள் ஜான்சி ராணி**

**துதிக்க:** நான்கு பேர் தேவ அன்பின் பிடிக்குள் வந்து அவரை அறிக்கையிட்டனர். காலில் அடிபட்டு நடக்க இயலாமலிருந்த டுடிக்கி கிராமத்தின் கிரண் கௌர் குணமாகி நடக்க ஆரம்பித்துள்ளார். வீடின்றி தவித்த தரம்கோட் கிராமத்தின் கஜனி ஜெபத்தின் விளைவாக ஊரிலே ஒரு வீடு கட்ட தேவன் கிருபை செய்தார். உடலெல்லாம் வீங்கி காணப்பட்ட நிலையில் கர்ஜீத் கௌர் ஜெபித்து சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆலயம் வருவதை தடை செய்யும் கோல்டியின் கணவன் மனம் மாற; தலையில் அடிபட்டுள்ள சுக்கா விரைவில் பூரண குணம் பெற; 6 வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக வேண்டிவரும் ஜலாலாபாத் கிராமத்தின் ராஜியின் வேண்டுதல்கள் கேட்கப்பட; பைக்கா கிராம புது விசுவாசி உஷாவின் வீடு கட்டும் முயற்சி வெற்றி பெற; தில்ப்ரீத் மற்றும் சிங்காந்தருக்கு இரட்சிக்கப்பட்ட வாழ்க்கைத் துணைகள் கிடைக்க ஜெபிப்போம்.

## புத்லாடா பிராந்தியம்:

**சஞ்ஜீப் ஆனந்த் & பிரஸ்துதா;**
**பிரதாப் ரஹாங் & ரேஷ்மி**

**துதிக்க:** ஐந்து நபர்கள் தேவனின் அன்பை ருசித்து அதனை அறிக்கையிட்டனர். தமன் கார் மற்றும் சோட்டி மூர் கிராமங்களில் வெளிப்புற நற்செய்தி பகிரும் நிகழ்வு சிறப்பாக நடந்தேறியது. சுமார் 200 நபர்களுக்கு சுவிசேஷ கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. பத்திண்டா பணித்தளத்தில் சுமார் 400 பேர் கூடிய நற்செய்தி கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. பூச்சோ மாண்டி மற்றும் பாஹி கிராமங்களில் ஆத்தும ஆதாயப்பயிற்சி வாலிபர்கள், பெண்கள் மற்றும் சபை மூப்பர்களுக்கு சிறப்பாக கொடுக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மண்டிகலா, சௌக்கி, கோக்கார், பீக்கோட், குட்டிவாலி ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க எடுக்கப்படுகின்ற முயற்சிகள் வெற்றி பெறவும், மக்கள் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டவும், நடைபெறவிருக்கும் கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி, இயேசு திரைப்படம் காண்பிக்கும் நிகழ்ச்சி, சத்சங் நிகழ்ச்சி ஆகியன ஆசீர்வாதமாக நடந்தேற ஜெபிப்போம்.

## அஹ்மத்கட் மண்டி:

**கிருபா ரக்ஷனா பரே & ஷக்கினா**

**துதிக்க:** சன்னா கிராமத்தில் நடைபெற்ற பெண்களுக்கான கூடுகையில் அநேகம் பேர் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர். சோங்வால் கிராமத்தில் சுவிசேஷம் பகிரப்பட்டதில் 30 பேர் நின்று கேட்கவும் அதில் ஒரு குடும்பம் விசுவாசத்திற்குள் வரவும் தேவன் கிருபை செய்தார். வயலில் புல் அறுத்துக்கொண்டிருந்த ப்ரீத்தோ என்கிற விசுவாசி புல் அறுக்கும்போது கீழே கிடந்த பாம்பையும் சேர்த்து அறுத்துவிட்டார். எந்த சேதமும் இன்றி பாதுகாத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டெல்லர் கிராமத்தில் மீண்டும் ஆராதனைத் துவங்கப்பட; பொய் வழக்கில் சிக்கவைக்கப்பட்டுள்ள லாடி அதிலிருந்து மீண்டு வர; முதுகுத்தண்டுவட அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ள லக்ஷ்மண் விரைவில் குணமடைய; பணித்தளத்தில் அதிகம் வசிக்கும் இஸ்லாமிய சகோதரர்கள் மத்தியில் ஊழியம் செய்ய சுதேச ஊழியர் கிடைக்க ஜெபிப்போம்.

## 4 டிசம்பர் திங்கள்

# ஹரியானா

### ஜீவன் நகர்:
### அலியாக்கீம் ஜெனா & தீபிகா

**துதிக்க:** ஆலய ஆராதனையை முடித்து திரும்பிக்கொண்டிருந்த வேளையில் நடைபெற்ற இருசக்கர வாகன விபத்தில் சிறு காயங்களோடு நமது ஊழியர் குடும்பம் தேவ கிருபையால் காப்பாற்றப்பட்டது. தபாலி கிராமத்தில் நடந்த ஆராதனையில் ஒருவர் இயேசுவே தெய்வம் என்று அறிக்கையிட்டார். 4 இடங்களில் வேதாகம வகுப்புகளும், 4 இடங்களில் பெண்களுக்கான சிறப்புக் கூடுகைகளும் நடத்த தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லாம்பி, சர்கொர், கபீர் பஸ்தி, வார்டு 15, ரபிதாஸ் நகர், அபுசேகர் மற்றும் மோனியா கிராமங்களில் கிரமமாக நடைபெற்று வரும் சிறு ஜெபக்குழுக்கள் வல்லமையாக செயல்படவும், அந்த கிராமங்களில் அநேகர் கிறிஸ்துவண்டை வரவும், ரணியா உப பணித்தளத்திற்கு ஒரு அர்ப்பணிப்புள்ள ஊழியர் கிடைக்க; திட்டமிடப்பட்டிருக்கின்ற கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி, சத்சங் கூடுகை ஆகியன சிறப்பாக எந்தவொரு தடையுமின்றி நடந்தேற ஜெபிப்போம்.

### ஃபத்தேஹ்பாத்:
### டேவிட் எஸ். & ஜெப கிரேஸ்

**துதிக்க:** 120 நபர்களுக்கு நற்செய்தி பகிரப்பட்டது. அசோக் நகர் காலனியில் நடைபெற்ற வாலிபர் முகாமில் 45 வாலிபர்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர். பாட்டியா காலனியின் சிவா – சந்தியா தம்பதியினர் தொடர்ந்த ஜெபத்தினால் வீடு கட்ட நிலம் வாங்க தேவன் கிருபை செய்தார். மட்டான் கிராமத்தின் அனிதாவின் கணவருக்காக சபையினர் கூடி ஜெபித்தபோது அவர் மனந்திருந்தி குடும்பத்துடன் வந்து சேர்ந்து வாழ ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசி முன்னாவின் குடும்பம் அதீத வறுமையின் பிடியிலிருந்து விடுபட; விசுவாசி ரஜனியின் கணவர் கைலாஸின் தற்கொலை எண்ணம் மாறிட; ஃபத்தேஹ்பாத் பணித்தளத்திலே தற்காலத்தில் நடைபெற்று வரும் குழுச்சண்டை, கொலை, கொள்ளை போன்றவைகள் நிறுத்தப்படவும் நமது விசுவாசிகளின் வாலிபர்கள் இந்த சூழலில் சிக்கிவிடாதபடி இருக்கவும் ஜெபிப்போம்.

### ரத்தியா: கார்த்திகேயன் & ஜெயந்தி

**துதிக்க:** மஜாரா கிராமத்தில் குடித்து வெறித்து போதை வஸ்துகளுக்கு அடிமையாக இருந்த பல்வீந்தர்சிங் நமது ஊழியர்களின் ஜெபத்தினால் போதையில்லா புது வாழ்வுப் பெற்று அநேகருக்கு சாட்சி கூறி வருகிறார். வீடு கட்ட அரசாங்கத்தின் உதவியினை எதிர்பார்த்துகொண்டிருந்த சுந்தர்பேனுக்கு ஜெபத்தின் விளைவாக விரைவில் லோன் கிடைக்க தேவன் கிருபை செய்தார். பெண்கள் மற்றும் வாலிபர் கூட்டங்கள் திட்டமிட்டப்படி சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரக செயல் இழப்பால் கஷ்டப்படுகிற குருசரண்சிங் அற்புத சுகம் பெற; எம்.பி.சொட்டர் பகுதியில் வாலிபர் மற்றும் பெண்கள் கூட்டங்கள் ஆரம்பிக்க எடுக்கப்படும் முயற்சிகள் கைகூட; ரவி, ரிங்கு, சுனில், அசோக் ஆகிய நமது விசுவாச வாலிபர்களுக்கு நல்ல வேலை கிடைக்க; சாக்ஷியின் கண்பார்வை குறைபாடு குணமாக ஜெபிப்போம்.




# உத்தராகண்ட்

## மல்தன்சோர்:

### ஷிஷூ பால் & அனிதா

**துதிக்க:** 6 நபர்கள் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். பார்வை குறைபாட்டால் கடந்த 4 வருடங்களாக அவதியுற்று வந்த மீனாட்சி நமது ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது குணமடைந்தார். 3 இஸ்லாமிய விசுவாசமுள்ள குடும்பங்கள் ஆலயத் திற்கு புதிதாக வர ஆரம்பித்துள்ளனர். பகவந்பூரில் சிறு ஜெபக்குழு ஆரம் பிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மால்டா 3, 5 மற்றும் 8 செக்டார்களிலுள்ள நமது புதிய தொடர்பாளர்கள் கிறிஸ்துவை இன்னும் அறிந்துகொள்ள; ரஜ்வந்தசிங் மற்றும் சபரி அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுபட; குலிஜெரா, சம்பா, சன்ஜனா, அக்லி மற்றும் ஆஷிஷ் கிறிஸ்துவின் விசுவாசத்தில் பலப்பட ஜெபிப்போம்.

## பஸ்பூர்:

### கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்

**துதிக்க:** எட்வாவா கிராமத்தில் 2 நபர்கள் இயேசுவே தெய்வம் என்று அறிக்கையிட்டனர். மணஸ்கேடா, எட்வாவா கிராமங்களில் நற்செய்திக்கு நல்ல வரவேற்பு காணப்படுகிறது. எட்வாவா கிராமத்தின் குர்மீர்சிங் நுரையீரல் பாதிக்கப்பட்டு இரத்த வாந்தி எடுத்த நிலையில் ஜெபித்து சுகத்தைப் பெற்றுக்கொண்டார். ஆகாஷ் மற்றும் சங்கீதா வீட்டில் மின்சாரத் தாக்குதலிலிருந்து உயிர் தப்பசெய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசு திரைப்படம் பார்த்த வர்கள் மனதில் ஒரு மாற்றம் நிகழ; கைகள் தீப்பிடித்து உருதெரியாமல் போனநிலையில் ஜெபித்துவரும் ஜான்கி கௌர் விரைவில் சுகம் பெற; கிருஷ்ணாவின் சகோதரிக்கும், சுராஜ்கும் நல்ல வாழ்க்கைத்துணைகள் அமையப் பெற; பக்கத்து மாநிலங்களுக்கு வேலைக்குச் சென்றுள்ள நமது விசுவாசிகளின் பாதுகாப்பு மற்றும் ஆவிக் குரிய வாழ்க்கைக்காக ஜெபிப்போம்.

## தினேஷ்பூர்: ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்

**துதிக்க:** காட்டுபுலியா கிராமத்தில் நற்செய்திக்கு கிடைத்த திறந்த வாசலுக் காகவும், ஜஸ்விந்தர் குடும்பம் வீட்டை ஜெபக்கூடுகைக்கு திறந்து கொடுத்ததற்காகவும்; சாரதா டெங்கு காய்ச்சலிலிருந்தும் அதின் பலவீனத்தி லிருந்தும் விடுதலை பெற்றதற்காக; ஆலாக் கிராமத்தின் கவிதாவின் நீண்டநாள் ஜெபத்தின் பலனாக அவர் ஒரு வீடு கட்ட ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தைநம்பர் கிராமத்தின் சிறுவன் விவேக்கின் தொண்டை அறுவை சிகிச்சைக்குப்பின்னும் உள்ளே மறு படியும் வளர்கிற கட்டி மறைய; தைநம்பர் கிராமத்தின் இளம் பெண் ஜோதிக்கு வரும் தற்கொலை எண்ணம் மறைய; ராஜுவின் குடும்பத்தில் சமாதானம் நிலவ ஜெபிப்போம்.

6
டிசம்பர்
புதன்

*உபவாச ஜெபநாள்*

# ராஜஸ்தான்

## அனுப்கார்:

**பவுலஸ் பர்ஜோ & பினிட்டா டொப்போ**

**துதிக்க:** 2 கிராமங்களுக்குச் சென்று நற்செய்தி புதிதாக பகிர தேவன் கிருபை செய்தார். புதிய கிராமங்களில் 22 பேர் ஆவலுடன் புதிய ஏற்பாடு வாங்கினர். 50 நபர்களுக்கு நற்செய்தி கைப் பிரதிகள் விநியோகிக்கப்பட்டது. 5 இடங்களில் வேதாகம விளக்க வகுப்பு களும், 2 இடங்களில் பெண்களுக்கானச் சிறப்புக் கூட்டமும் நடத்தப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அமர்ஜித், மன்ப்ரீத், ஜஸ்ப்ரீத், பிரியங்கா மற்றும் டோனி குடும்பம் கிறிஸ்துவை அறிக்கையிடவும், அதற்கு தடையாக இருக்கின்றவை அகலவும், 17(அ) காலனிலுள்ள சுசிலா அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற; புதிய ஏற்பாடு மற்றும் நற்செய்தி பிரதிகள் வாங்கினவர்கள் அதனை வாசித்து உண்மையான தெய்வத்தைக் கண்டுக்கொள்ள ஜெபிப்போம்.

## அஜீத்கார்:

**ஜெய்பீர் சிங் & தேவி ராணி**

**துதிக்க:** சுராணி கிராமத்தில் நற்செய்தி புதிதாக அறிவிக்கப்பட்டபோது நிறைய மக்கள் ஆவலுடன் கேட்டனர். பூஜாவின் கழுத்திலிருந்தக்கட்டியும், சகோதரி மதுவின் டெங்கு காய்ச்சலும் ஜெபத்தினால் சுகமானது. புத்ஹோலி கிராமத்தில் ஒரு புதிய தொடர்பாளர் விசுவாசத்திற்குள் வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தன் தாய் மரித்தபின் அசுத்த ஆவியின் தாக்குதலுக்குள்ளாகி யாருடனும் பேசாமலும், தன் படிப்பைத் தொடராமலும் இருக்கும் சோனு நல்ல நிலைமைக்குத் திரும்ப; பணித்தளத்திலுள்ள விசுவாச இளைஞர்கள் தேவப்பணிக்கென அர்ப்பணிப்புடன் முன்வர; ரட்டன் மற்றும் ஜிதேந்தர் தங்கள் குடிப்பழக்கத்திலிருந்து மனந்திரும்பவும் குடும்ப நபர்கள் ஆலயம் செல்வதை தடுக்காமல் இருக்கவும் ஜெபிப்போம்.

## உதய்பூர்:

**ஆஷிஷ் குமார் & சவிதா தேவி**

**துதிக்க:** 5 நபர்கள் தங்களை கிறிஸ்துவின் சீடர்களாக அறிக்கை செய்தனர். 3 மாதங்களாக ஆக்சிஜன் சிலிண்டர் உதவியுடன் சுவாசித்துக்கொண்டிருந்த சுகுணா ஜெபத்தின் விளைவாக சுயமாக சுவாசிக்க ஆரம்பித்துள்ளார். சாலை விபத்தில் சிக்கி பெரிய சாக்கடைப் பள்ளத்தில் விழவிருந்த திலீப் கர்த்தரால் காப்பாற்றப்பட்டார். கைலாஸ், பிரபு மற்றும் அருணா அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனநலம் பாதிக்கப்பட்டுள்ள ராகுலும் அவரது தாயார் காளியும் குணமடைய; அதிக இரத்தப் போக்கினால் அவதியுறுகிற ஆஷா சுகம் பெற; இந்த மாதம் நடக்கவிருக்கிற ராஜஸ்தான் மாநில தேர்தலில் கர்த்தருக்கு சித்தமானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பீனாக்ஷி B. வசாவா சுனில்
திரு. பிதான் ஹன்ஸ்தா

### ஹனுமான்கட்: முதவத்து ராஜு நாயக் & புக்கியா ஜான்சிபாய்

**துதிக்க:** மூன்று நபர்கள் கிறிஸ்துவின் சீடர்களாக தங்களை வெளிப்படுத்திக் கொண்டனர். 5 இடங்களில் வேதாகம விளக்க வகுப்புகள் கிரமமாக நடைபெற்றன. சோனாபாய் பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலைப் பெற்றார். சபை மூப்பர் ராஜேந்திரன் அறுவை சிகிச்சைக்குப் பின் குணமடைந்து ஆலயம் வர தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அதீத உதிரப்போக்கினால் அவதியுறும் அஞ்சலி மற்றும் சுனிதா தேவனால் குணமாக்கப்பட; புதிதாக வீடு கட்ட திட்டமிடும் ஜக்கிர்சிங் மற்றும் விக்கியின் முயற்சிகள் கர்த்தரால் கைகூடிவர ஜெபிப்போம்.

### ஸ்ரீ கங்காநகர்: போடார் அம்ருத்பாய் & சுவேரா மார்த்தா

**துதிக்க:** வேலையின்றி பொருளாதார ரீதியாக கஷ்டப்பட்ட நாத்துராம் ஜெபித்து நல்ல வேலையினை தற்போது பெற்றுள்ளார். தீய ஆவியின் பிடியிலிருந்து தொடர் ஜெபத்தினால் அஞ்சு விடுதலைப் பெற்றுள்ளார். எஸ்.எஸ்.பி. காலனியில் பெண்கள் கூடுகையும், லக்ராநகரில் வேதாகம விளக்க வகுப்புகளும் நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராஜு, யுவராஜ் மற்றும் சைனிக்கு நல்ல வேலை கிடைக்க; காசநோயினால் பாதிக்கப்பட்டுள்ள இளம் பெண் கிரண் சுகம் பெற; கரண்பூர் மற்றும் கங்கா நகர் பகுதிகளில் வளர்ந்துவரும் ஊழியங்களுக்காகவும் அர்ப்பணமுள்ள ஊழியர்கள் கிடைக்கவும்; மஜிவாலா, 16 எஸ் காலனி பகுதி விசுவாசிகளுக்கு இடையே ஏற்படுகின்ற பிரச்சினைகள் விலகிப்போக ஜெபிப்போம்.

### கேர்வாடா: போயா தேவுபாய் & ஜாமுபேன்

**துதிக்க:** 19 நபர்கள் இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள தங்களது விசுவாசத்தை வெளிப்படையாக அறிவித்தனர். 8 வயது ஆதிமுகேஷ் தமர் டெங்குவினால் பாதிக்கப்பட்டு இரத்த அணுக்கள் மிகவும் குறைந்த நிலையில் உதய்பூரின் பெரிய அரசாங்க மருத்துவமனைக்கு மாற்றப்பட்டான். விசுவாசிகள் ஊரில் ஊக்கமாக ஜெபிக்கவே நல்ல சுகத்துடன் ஊர் திரும்பினான். ஜெபத்தினால் ரேஷ்மா தன் இழந்த பார்வைத்திறனை திரும்பப் பெற்றாள். சவிதா இரத்த வாந்தி எடுப்பதிலிருந்தும், ஹர்க்கி பக்கவாதத்திலிருந்தும் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திடீர் திடீரென சுயநினைவின்றி மயங்கி விழும் ராம்செக்டா கிராமத்தின் அனில் சுகம் பெற; அசுத்த ஆவியினால் அலைக்கழிக்கப்படும் நால்வா கிராமத்தின் நராயண் வாசா மற்றும் சாரதா விடுதலைப் பெற; கடந்த 3 வருடங்களாக நோயின் தாக்கத்தினால் பேச்சு வராமல் தவிக்கும் கொடியான் கிராமத்தின் பிண்டுபாய் திரும்ப பேசும் திறனைப் பெற ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

செல்வி. டோன்ஸாசின்

திருமதி. ரீனா ஆரோன்சிங்

## உத்தரப் பிரதேசம்

### வடக்கு மண்டல அலுவலகம்:

**எஸ். பொன்னுசாமி & சித்ரா**

**துதிக்க:** சம்ரணியா பணித்தளத்தில் 53 பேரும், லுகாரி கிராமத்தில் 43 பேரும், சரேக்கடா கிராமத்தில் 7 பேரும் மற்ற இடங்களையும் சேர்த்து மொத்தமாக 218 நபர்கள் கிறிஸ்துவே தெய்வம் என்று அறிக்கையிட்டனர். நமது கோண்டா விடுதி மாணவன் ஆஷிஷ்க்கு ஐ.டி.ஐ. யிலும், ஆல்வர் விடுதி மாணவன் ராகுலுக்கு கணினி அறிவியல் படிப்பதற்கும் இடம் கிடைத்துள்ளது. கான்பூர், பிரக்யாபூர், சக்கிபூர்வா, மொய்தி மற்றும் கோஷிபூர்வா ஆகிய கிராமங்களில் கிரமமாக நடைபெற்று வரும் சிறு ஜெபக்குழுக்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பார்த்தனா பணித்தளத்தின் கார்ஜி ஆலயத்தின் முகப்பிலுள்ள சிலுவையை அகற்றாவிடில் ஆலயம் உடைக்கப்படும் என்று மாவட்ட நிர்வாகம் எச்சரித்துள்ளது. எதிர்ப்புகளினால் மூடப்பட்டிருக்கும் காட்டம்பூர், பஹவா, பகுவான், சிலி, ஜகனாபாத் ஆலயங்கள் மறுபடியும் திறக்கும் சூழ்நிலைகள் உருவாக; சனியானா கிராம ஆலயக்கட்டுமானப் பணி எந்தவித எதிர்ப்புமில்லாமல் கட்டி முடிக்கப்பட; சிறையிலிருக்கும் மற்றும் வழக்குகளை சந்தித்து வரும் அனில் குமார், ஜெய்லால், ஜங்கலுன் தௌதங் ஆகியோர் விரைவில் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

## மத்தியப் பிரதேசம்

### சிரியா:

**மகேந்திரன் & புஷ்பம்**

**துதிக்க:** ஐந்து நபர்கள் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தினர். குர்மாபாத் கிராமத்தில் புதிதாக ஆராதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நீண்ட நாட்களாக வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த பினாபேன் ஜெபத்தினால் குணமடைந்து வருகிற தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போடியாபலியா கிராமத்தின் புதிய விசுவாசி சுனிதாபாய் தன்னுடைய மார்பக புற்றுநோயிலிருந்து குண மடைய; பிப்பர்கேடாவின் மங்கள்பாய் காசநோயின் தாக்கத்திலிருந்து விடுபட; நிலம் பகிர்தல் பிரச்சினையில் செம்மால் காட் கிராம விசுவாசி முரார்பாய் மற்றும் அவரது மகன் அடிபட்டு மருத்துவ மனையில் இருந்துவரும் நிலையில் அவர்கள் விரைவில் சுகமடையவும், நிலத்தில் அவர்கள் பங்கு அவர்களுக்கு கிடைக்கவும் ஜெபிப்போம்.

## 9 டிசம்பர்
சனி

**பால்: வெங்கடேஷ் வடார் & ஷீபா**

**துதிக்க:** ஐந்து கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு 567 பேர்களுக்கு நற்செய்தி பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. பிப்பல்குரா கிராமத்தின் சுனிதாவுடன் சண்டையிட்டு சென்றுவிட்ட கணவர், ஜெபத்திற்கு பிறகு திரும்பி வந்திருக்கிறார். சோலாபர்டி கிராமத்தின் தார்சிங்கின் மகன் கண்ணில் கம்பி குத்தியதால் செப்டிக் ஆகி தற்போது குணமாக கிருபை செய்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புல்லிபேன் விபத்தில் தன் காலில் அடிபட்டு சரியான சிகிச்சையின்றி கால் அழுகும் நிலையில் ஜெபத்திற்கு வருகிறார். அவர் குணமடைய; சுனிலின் கேட்கும் திறன் மேம்படவும், கஸ்தூரியின் பக்கவாதம் குணமாகவும், நமது ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அம்பாபானி கிராமத்தலைவர் மனம் மாற ஜெபிப்போம்.

### நேப்பாநகர்:
**ஜூபராஜ் பர்தன் & ஷீபா ஜாஸ்மின்**

**துதிக்க:** சிடியாம்மால் கிராம விசுவாசிகள் தங்கள் வேலையினிமித்தம் வண்டியில் சென்றுகொண்டிருந்தபோது வாகன சோதனையில் சிக்கி ரூ.10,000/- அபராதம் கட்ட வேண்டிய சூழ்நிலையில் மூப்பரின் மனைவி ஜெபித்தபோது ரூ.500/- ஆக அதனை மாற்றின தற்காக; ஹிராபூரின் புல்வந்திபாய்-கங்குபாய் தம்பதி சென்ற வருடம் தங்கள் குழந்தையை இழந்த நிலையில் இந்த வருடம் அழகானக் குழந்தையை தேவன் ஈந்தார். பட்டேல்தனா சபை மூப்பர் நர்சிஸ்பாயின் பேரன் சந்தோஷ் திடீரென மூச்சு பேச்சின்றி விழுந்தவுடன் ஜெபத்துடன் முதல் உதவி செய்து மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு பிழைக்க வைக்கப்பட்டுள்ளான். நீண்ட நாட்களாக வியாதிப்படுக்கையிலிருந்த துக்கைதேட் சபை மூப்பர் பாவார்சிங்கின் அனைத்து குடும்ப உறுப்பினர்களும் குணமடைந்த தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாம்லாபாட் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் ஆலயத்திற்கு கிராமத்திலிருந்தும் அரசாங்க தரப்பிலிருந்தும் கடும் எதிர்ப்புகள் நிலவுகின்ற சூழ்நிலையில் சபை மூப்பர் ஜெனட்லால் வனத்துறை அதிகாரிகளிடம் ஞானத்துடன் பேசவும் கட்டுமானம் தொடர்ந்து நடக்கவும், அதிகாரிகள் தரப்பிலிருந்து எந்தவொரு தடையும் வராதபடி இருக்கவும் ஜெபிப்போம். மனநிலைப் பாதிக்கப்பட்டுள்ள கல்லர் கிராமத்தின் ராம்லாலின் மனைவி சுகமடைய; மழைக்காலம் முடிந்து வெளி மாவட்டங்களுக்கு வேலைக்குச் சென்றிருக்கும் நமது விசுவாசிகள் பாதுகாக்கப்படவும், ஆவிக்குரிய வாழ்வில் தொய்வு வராமலிருக்கவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண் குல்லு

## கண்ட்வா பிராந்தியம்:

**ஐசக் & சீதா**

**துதிக்க:** 10 பேர் கிறிஸ்துவின் ஐக்கியத்திற்குள்ளாக வந்துள்ளனர். விசுவாசிகளுக்கு 2 நாட்கள் உபவாச ஜெபம் 12 சபைகளில் நடத்தப்பட்டது. ஆவரிகெடா கிராமத்தில் புதிதாக ஒரு ஆராதனைக்குழு தொடங்கப்பட்டுள்ளது. திட்டமிடப்பட்டுள்ளபடி அனைத்து ஊழியப்பணிகளையும் தேவநாம மகிமைக்காக நிறைவேற்ற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜாம்தாட் கிராமத்தின் விசுவாசி கஞ்சுபாய் வேலையின் போது தசைப்பிடிப்பு ஏற்பட்டு அதற்கு அறுவைசிகிச்சை செய்ய மருத்துவர்கள் பரிந்துரை செய்திருக்கின்றனர். கூலிவேலை செய்துவரும் அவர் பணமின்றி கஷ்டப்படும் சூழ்நிலையில் தேவன் அற்புத சுகம் தர; அஞ்சயா –நிமா தம்பதியினர் குழந்தைச் செல்வத்தால் ஆசீர்வதிக்கப்பட; புட்டா கிராமத்தின் 35 வயது நளினி அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுபட ஜெபிப்போம்.

# பீஹார்

## கிழக்கு கங்கை பிராந்தியம்:

**பாபு புஷ்பராஜ் & ரேச்சல் ஜாய்ஸ்**

**துதிக்க:** ஹரிராம்பூரா, கமலாபூர், பட்யாபூர் மற்றும் ராம்டங்கா பகுதிகளில் ஆராதனைக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முகேஷி, சப்டாபர்னா மற்றும் பஜ்னாட்பூர் கிராமங்களில் வேதாகம விளக்க வகுப்புகள் கிரமமாக நடைபெற்று வருகின்றன. லால்பூரிலிருந்து புல்லேஸ்வர் குடும்பமும், மஸ்கானிலிருந்து சஞ்ஜீத் குடும்பமும் மீண்டும் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் தங்களை நிலைநிறுத்திக் கொண்டனர். தாம்புவா கிராமத்தில் தீ பற்றியெரிந்த வீட்டிலிருந்து நமது விசுவாசி குடும்பம் சேதமில்லாமல் காப்பாற்றப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அரசாங்க ஆசிரியர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டும் இன்னும் பணி ஆணை கிடைக்கப்பெறாமல் இருக்கிற பகவான்பூர் கிராம மித்லேஷ் விரைவில் பணியில் நியமிக்கப்பட; விசுவாசி அசோக்கின் புதிதாகப் பிறந்துள்ள பேரன் எந்தவொரு அசைவோ சத்தமோ இல்லாமல் இருக்கிற நிலைமை மாற; சஞ்ஜய்நகர் ராம்தாஸ் மற்றும் ஜெர்வா கிராம ரமேஷ் காசநோயின் தாக்கத்திலிருந்து விடுபட; சந்தன் ரிஷிதேவ், சஜ்ஜன்தேவி, வினோத் ரிஷிதேவ் ஆகியோர் பிறமத நண்பர்களுடன் தவறானப் போதனையில் சிக்கிக்கொள்ளாமல் இருக்க ஜெபிப்போம்.

## 11 டிசம்பர் திங்கள்

### ராணிகன்ஜ்:

**தர்மேந்தரா பரிச்சா & மதுஸ்மிதா பானி**

**துதிக்க:** வெளிப்புற நற்செய்தி அறிவித்தல் மூலமும், இயேசு திரைப்படம் திரையிடுதல் மூலமும் இயேசு கிறிஸ்துவின் அன்பின் செய்தி அநேக மக்களுக்கு பகிரப்பட்டது. நாகேஷ்வர் – காண்டுலா தேவி தங்கள் வேலைகள் முடித்து பஞ்சாபிலிருந்து சுகபத்திரமாக ஊர் திரும்ப தேவன் உதவி செய்தார். புதிய தொடர்பாளர் ரகேஷ்பாய் தன் சரீரத்தில் காணப்பட்ட பலவீனங்களை ஜெபத்தின் மூலம் மறையச்செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சஞ்ஜன் ரிசிதேவ், சந்தன் தேவி, பபிட்டா ஆகிய புதிய விசுவாசிகளை குழப்பும் நபர்கள் மனந்திரும்ப மற்றும் நமது விசுவாசிகள் கர்த்தர் மீதுள்ள விசுவாசத்தில் உறுதியாக நிற்க; மக்னா கிராமத்திலுள்ள நமது புதிய தொடர்பாளர்கள் கர்த்தரைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளவும் விரைவில் கிறிஸ்துவை அறிக்கையிடவும் ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

### மண்ட்ரோ & பகையா மாணவர் விடுதி:

**கென்னடி சிங் & ஹயோஜம் லின்தோய்பி**

**துதிக்க:** ஏழு நபர்கள் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தினர். 17 இடங்களில் நற்செய்தி 4000 பேருக்கு பகிரப்பட்டது. சிறு ஜெபக்குழுக்கள், உபவாசக் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாக்காபூர், மணிக்பூர், ரோக்காரா கிராமங்களில் காணப்படும் எதிர்ப்புகள் மறைய; பீஹார் மாநிலத்தின் ராக்கானஜ் மற்றும் ரேக்காடோலா கிராமங்களில் நற்செய்திக்கு திறந்த வாசல் உருவாக; ஆலய மூப்பர்கள் தங்கள் சபைகளை ஆவிக்குரிய வழியில் நடத்த; படிப்பிலே மிகவும் சுமாராக இருக்கும் நமது விடுதி மாணவர்களுக்கு தேவன் நல்ல அறிவைத் தர ஜெபிப்போம்.

### பகையா:

**ஜெபக்குமார் & பொன்லதா**

**துதிக்க:** ஓராவன் இனமக்களை தமிழ் நாட்டுக்கு திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு அழைத்துவரவும், அவர்கள் இங்குள்ள ஆலயங்கள் மற்றும் விசுவாசிகளைக் காணவும் தேவன் கிருபை செய்தார். டோனாவூர் பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும் ஊழியரின் மகனுக்கு கை ஒடிந்து அறுவை சிகிச்சை செய்யப்பட்டு நல்லமுறையில் பள்ளிக்குத் திரும்ப கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பீஹார் மாநிலத்தின் கட்டிகார் மற்றும் பூர்ணியா மாவட்டங்களில் வசித்து வரும் ஓராவன் இனமக்களை சந்திக்க பீஹார் மாநிலத்தில் ஒரு உப பணித்தளம் தொடங்கவும் அதற்கு அர்ப்பணமுள்ள இளைஞர்கள் முன்வரவும், பைசா கிராம ஆலயக்கட்டுமானப்பணி எந்த தடங்கலுமின்றி விரைவில் கட்டி முடிக்கப் படவும், சபை மூப்பர்கள் தங்கள் சபையின் ஆத்தும வளர்ச்சிக்கு பொறுப்பேற்று, ஆர்வத்துடன் சேவை செய்யவும் ஜெபிப்போம்.




### ஹன்ஸ்டிகா: செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி

**துதிக்க:** இடியினால் தாக்கப்பட்ட சித்தி லால் சோரேன் குணமடைந்து வருகிறார். விபச்சார பாவத்தை தொழிலாகச் செய்து கொண்டிருந்தவர்களைக் கண்டித்து கிறிஸ்துவின் நற்செய்தியினை அறிவிக்கும் பணியை விசுவாசிகளில் சிலர் செய்து கொண்டிருக்கின்றனர். விசுவாசிகளின் ஜெபத்தைக் கேட்டு நல்ல மழையை இந்தக் காலங்களில் கட்டளையிட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இடியினால் தாக்கப்பட்ட சித்தி லாலின் மனைவி பிசாசின் தாக்கு தலுக்குள்ளாகி உபத்திரவப்படுகிறார், இந்த குடும்பத்தின் விடுதலைக்காக; சர்காரா கிராம விசுவாசிகள் சந்திக்கும் எதிர்ப்புகள் மறைய; பல இடங்களில் ஊழியம் விருத்தியடைந்து வருவதால் இருக்கின்ற ஒரே ஒரு சுதேச ஊழியர் எல்லா இடங்களுக்கும் செல்ல முடியாத சூழ்நிலை மாறி தேவன் இன்னும் அர்ப்பணமுள்ள ஊழியர்களை எழுப்பித்தர ஜெபிப்போம்.

### சிக்காரிபாடா: சுகாந்தோ குமார் சிங் & ராணி லாசரஸ்

**துதிக்க:** 29 நபர்கள் கிறிஸ்துவின் மீதுள்ள அன்பை வெளிப்படுத்தினர். தன்பாத் கிராமத்தின் இசோர் கிஸ்குவின் மகன் பிமோல் கிஸ்குவை ஆட்கொண்டிருந்த தீய ஆவி பல இடங்களுக்குச் சென்றும் விடுவிக்கப்பட முடியாமல், இறுதியாக நமது ஜெபத்தின் மூலம் அவனைவிட்டு விலகியது. ஆலய மூப்பர்களுக்கு 3 கிராமங்களிலும், வேதாகம விளக்க வகுப்புகள் 3 கிராமங்களிலும், சிறு ஜெபக்குழு பயிற்சி முகாம்கள் 3 கிராமங்களிலும் நடைபெற்றன. நெல்லை மாவட்டத்திலுள்ள ஜெபக்குழு மூலம் துர்காபூர் ஆலயப்பிரதிஷ்டை வைபவம் சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஒருங்கிணைந்த சிறுவர் மேளா சிறப்பாக நடந்தேற; போடேசிமால் கிராமத்தில் ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றவர்கள் இயேசுவைப் பற்றி அறிந்து, அவரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; துர்காபூர் ஆலயக்கட்டுமானப்பணி நிறைவுற்று பிரதிஷ்டை சிறப்பாக நடைபெற; நமது விசுவாசிகளின் நிலத்தில் நல்ல அறுவடை கிடைக்க; திட்டமிடப்பட்டிருக்கிற கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

### ராம்கார்: லெட்கோலுன் பெய்ட் & ஹட்நெய்கிம்

**துதிக்க:** 15 நபர்கள் கர்த்தர் மீதுள்ள தங்களின் விசுவாசத்தை வெளிப்படையாக அறிவித்தனர். 12 கிராமங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டு 3417 நபர்கள் அதனை காணும்படி தேவன் கிருபை செய்ததற்காக; ஆலய மூப்பர்களுக்கும் வேதாகமப்பள்ளி நடத்தும் வாலிப ஆண்கள் மற்றும் பெண்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மல்மலா மற்றும் குர்குர்கட்டா கிராமங்களில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க; போக்காவா மற்றும் ரோல்டி கிராமங்களின் கண்டஸ் டுடு மற்றும் மனோஜ் வலிப்பு நோய், காச நோயிலிருந்து சுகம் பெற; முந்தா கிராம ஜித்துமனி ஹெம்ரோம் புற்றுநோயிலிருந்தும், தோபிடாமா கிராம லில்லி ஹெம்ரோம் மனநோயிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.




உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஷீபா ஜாஸ்மின் ஜுபராஜ்

### நோனிஹாட்: பென்ஹர் எம். & மேரி ஜான்சி ராணி

**துதிக்க:** 34 நபர்கள் வெளிப்படையாக தாங்கள் இயேசுவின் மீது கொண்டுள்ள அன்பை அறிக்கையிட்டனர். ரூப்பால் முர்மு, தப்வால் மராண்டி மற்றும் லாடுகா ஹெம்ரோம் காசநோயின் கொடூர தாக்கத்திலிருந்து விடுதலைப் பெற்றனர். 8 கிராமங்களில் திரையிடப்பட்ட இயேசு காவியத்தை சுமார் 700 பேர் பார்த்தனர். சுக்கான் மராண்டி, ருபிலால் கிஸ்கு மனப்பிறழ்விலிருந்து சுகமடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் சல்மான் மராண்டி, சோம்லால் கிஸ்கு மற்றும் தேப்திலால் முர்மு மனந் திரும்ப; பரமாசியா, டும்ரியா, பலுவா, பத்தர்போனா, ராய்கி மகன்பூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க அனுமதி கிடைக்க; புதிதாக ஆலயம் வரும் அமித் மராண்டி, சுமித் மராண்டி, மிலான் சோரேன் ஆகியோர் இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தில் வளர்ந்து இயேசுவை அறிக்கையிட ஜெபிபோம்.

### பிராந்திய சமுதாய மேம்பாட்டு மையம் / தம்னி: ஜாண்பால் ஹாரிஸ் & விமலா டெய்சி

**துதிக்க:** குண்டேகோடா திருச்சபையில் 20 நபர்கள் இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். போத்தான் மற்றும் போடுவா சபைகளில் நடத்தப்பட்ட வாலிபர் சிறப்புக் கூடுகைக்கு அநேக வாலிபர்கள் வந்து தங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தனர். டும்ரிகிரி கிராமத்தின் சுனில் மால்தோவை இரத்த வாந்தி எடுப்பதிலிருந்தும், ரூத் மால்தோ மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் பல் வேறு நோயின் தாக்கத்திலிருந்தும் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகளுக்கு எதிராக செய்வினை செய்வதாக கூறிவரும் பேடோபூரா கிராமத்தின் ஜென்டா மால் தோவை தேவன் சந்திக்க; டகுபேடா கிராமத்தில் பின்மாற்றமடைந்துள்ள விசுவாசிகள் மீண்டும் தேவனண்டை வர; பட்பஹாரி கிராமத்தின் சாந்தி மால்தோவின் மருமகள் வீட்டைவிட்டு தாய் வீட்டுக்குச் சென்ற நிலையில் அவர் திரும்பி வந்து கணவரோடு சேர்ந்து வாழ ஜெபிப்போம்.

### சந்தால் பர்கானா சிறுவர் ஊழியம்: ஹென்றி & பியூலா

**துதிக்க:** பெல்டிஹா பகுதியில் நடத்தப்பட்ட விடுதி மாணவர்களுக்கான கூட்டத்தில் சுமார் 200 பேர் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றனர். சந்தால் சாஹிப்கஞ்ச் பிராந்திய மாணவர்கள் சுமார் 750 பேர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். சாந்தனா மாணவர்களின் பெற்றோர் களுக்கானக் கூடுகையில் சுமார் 200 பேர் கலந்துகொண்டு மாணவர்களின் எதிர்காலம் பற்றி கலந்துரையாடினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பர்ஹர்வா விடுதிக்கு நல்ல சமையல்காரர் மற்றும் விடுதிக் காப்பா ளர்கள் கிடைக்க; பள்ளிப் படிப்பை முடித்த மாணவர்களின் மேற்படிப்பிற்காக எடுக்கப் படும் முயற்சிகள் கைகூட; பெரிய மாண வர்கள் தங்கள் வாழ்க்கையை முன்மாதிரி யாக வைத்து, பெற்றோருக்கும், சபைக்கும் ஆசீர்வாதமாக இருக்க ஜெபிப்போம்.

## 14 டிசம்பர்
### வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ராணி ஜெஸிலெட் பால் ஆல்பர்ட்

### சுந்தர்பஹாடி & சாந்தனா மாணவர் விடுதி: டேனியல் தனசிங் & சுவிலா ஞானப்பூ

**துதிக்க:** 8 நபர்கள் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். விசுவாசியல்லாதோருக்கு சுவிசேஷம் அறிவிக்க 4 இடங்களில் விசேஷக் கூடுகைகள் நடைபெற்றன. கவாட்காவ் கிராமத்தின் சுசிலா மராண்டி மூளை மலேரியாவிலிருந்து குணமடைந்தார். சோட்டா சிந்தரி கிராமத்தின் திலீப்கோலைப் பாம்பு கடித்து ஜெபத்தினால் சுகமடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுந்தர்பஹாடி, சரோனி, மோஹன்பூர், சந்னா மற்றும் திலைப்படா கிராம சபைகளுக்கு புதிய ஆத்துமபாரம் கொண்ட மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட; பகாத்பூர் சபை மூப்பரின் மகன் ஜஸ்டின் முர்மு வலிப்பு நோயிலிருந்தும், மூப்பரின் மனைவி தீராத காய்ச்சலிலிருந்தும் பூரண குணமடைய; பாஸ்பாடா, அம்பலி, சபாய்குன்டி, அசலிபடா, துமார் தாரி, பஸ்ஜோரி, ஜஸ்காபூர், லவ்தியானா கிராமங்களில் நடத்தப்படப் போகும் சுவிசேஷம் அறிவிக்கும் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடக்கவும், அநேக புதிய தொடர்பாளர்கள் கிடைக்கவும் ஜெபிப்போம்.

### அமலகாச்சி:
### கஜன் சம்பிரமரி & ரோஷிலா

**துதிக்க:** சுதேச ஊழியர்கள், உபதேசிமார்கள் அனைவருக்கும் 'உள் காயங்கள் ஆற்றுதல்' பயிற்சி நடைபெற்றது. கொட்டா கிராமத்தின் சலோமி சகோதரியின் 2 வயது மகனுக்கு இருந்த கடுமையான காசநோயின் தாக்கம் ஜெபத்தின் மூலம் குறைந்தது. தால்மி கிராம சபையினர் ஆலயம் கட்ட நிலம் ஏற்பாடு செய்வதில் ஆர்வமாக இருக்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மங்களா, தர்மா, போர்சன், சுபாஷ் மற்றும் துக்ரு குடும்பங்கள் கிறிஸ்துவை அறிக்கையிட தயாராக இருக்கின்றனர். எந்தவொரு தடையுமின்றி நிகழ்ச்சி நடந்தேற; நாடி கிராமத்தின் சோனியா பஹாரியா குரு, சனாடங்கா கிராமத்தின் புத்தன் பஹாரியா குரு ஆகியோரால் வரும் தடைகள் நீங்கவும், மக்கள் இவர்கள் பிடியிலிருந்து விடுபடவும்; விசுவாசத்தில் பின்வாங்கிப்போனவர்கள் மீண்டும் கிறிஸ்துவண்டை வரவும் ஜெபிப்போம்.

## மேற்கு வங்காளம்

### மால்டா:
### அனில் குமார் பிசோயி & ஆலிஸ்

**துதிக்க:** நோக்ரானா, ஸ்ரீராம்பூர் மற்றும் ஜமினிபூரா கிராமங்களில் புதிதாக நற்செய்தி பகிரப்பட்டது. ஹரிரம்பூரா, கமலாபூர், பத்தேய்பூர் மற்றும் ராம்தங்கா கிராமங்களில் இரவுக் கூட்டங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 300 மக்களுக்கு நற்செய்தி கூறப்பட்டு சுவிசேஷ கைப் பிரதிகள் விநியோகிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராஜ்போன்சி இனமக்களில் கிறிஸ்துவை அறிக்கையிட தயாராக இருக்கும் மக்களுக்காக அவர்களின் தடைகள் யாவும் நீங்க; ரஹாபூர் கிராமத்தின் நில்லு தெப்ஷர்மா பக்கவாத நோயிலிருந்து குணமடைய; அட்குரா கிராமத்தின் நபோ தெப்ஷப்மா இருதயப் பிரச்சினையிலிருந்து குணமடைய ஜெபிப்போம்.

**15**
**டிசம்பர்**
**வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஏஞ்சல் ரோஞ்ஜய் நர்சாரி

### சம்சி: தீப் ரத்னா & மித்லேஷ்

**துதிக்க:** 6 நபர்கள் கிறிஸ்து மீதுள்ள தங்கள் விசுவாசத்தை ஆலயத்தில் வெளிப்படுத்தினர். வாக்ரி மற்றும் உதம்புக்காரி கிராமங்களில் முழுஇரவு ஜெபங்கள் சிறப்பாக நடைபெற்றன. 10 கிராமங்களில் வெளிப்புற நற்செய்தி கூட்டங்கள் நடத்தப்பட்டு அநேக நபர்களுக்கு சுவிசேஷ கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாக்ரி கிராமத்தில் கிறிஸ்துவை அறிக்கையிட தயாராக இருக்கும் இரு குடும்பங்களை மிரட்டும் நபர்களை தேவன் சந்திக்க; ரிஷி இனமக்கள் மத்தியில் ஒரு சிற்றாலயம் கட்ட எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெற; புதிதாக விசுவாசத் திற்குள் வந்துள்ள சனு மிஸ்ராவின் சுகப் பிரசவத்திற்காக ஜெபிப்போம்.

### பாக்குவாஹாட்: ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** 12 நபர்கள் இயேசுவே மெய்யான தெய்வம் என்று அறிக்கையிட்டனர். நீம்டங்கா என்கிற கிராமத்தில் புதிதாக ஆராதனை துவங்கப்பட்டுள்ளது. 10 கிராமங்களில் வெளிப்புற நற்செய்தி கூட்டங்கள் நடத்தி சுமார் 700 நபர்களுக்கு சுவிசேஷம் கூறப்பட்டது. ஓராவன் மக்கள் மத்தியிலிருந்து ஒரு குடும்பம் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். வாலிபர் முகாம் பெரிய அளவில் சிறப்பாக நடத்தப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை மூப்பர்களான சுங்கு டுடு, ராம் சோரேன், சபோல் ஹெம்ரோம், வாக்கில் ஹெம்ரோம் தங்கள் சபைகளை ஆவிக்குரிய வழியில் நடத்த; ஸ்ரீநாத் முர்மு, அவினாஷ் முர்மு, மித்துன் முர்மு கிறிஸ்துவை அறிக்கையிட தயாராகவும், தடைகள் யாவும் நீங்கவும், சுதேச ஊழியர் சுர்ஜித் தன்னுடைய சுகவீனத்திலிருந்து குணமடைந்து ஊழியத்தில் முழுமையாக ஈடுபடவும் ஜெபிப்போம்.

### தபன்: ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

**துதிக்க:** ஏழு ஆத்துமாக்கள் இயேசு கிறிஸ்துவுக்காக ஆதாயம் செய்யப்பட்டன. 10 கிராமங்களில் நற்செய்தி பகிரப்பட்டு 60 வீடுகள் தனியாக சந்திக்கப்பட்டன. 4 கிராமங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டுள்ளன. அநேக நாட்களாக மலம் இரத்தமாகப் போய்கொண்டிருந்த சுனிதா சோரேன், ஜெபத்திற்கு பிறகு குணமடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வருகின்ற வாலிபர் முகாம், விசுவாசிகள் முகாம், சபை மூப்பர்கள் கூடுகை இவைகளை தேவன் ஆசீர்வதிக்க; ஆலயத்திற்கு புதிதாக வரும் முண்டா பெஸ்ரா, புடின் மராண்டி, ஜோசன் ஹஸ்டா, பிசு ஹெம்ரோம், மித்துன் முர்மு, சுரேஷ் கிஸ்கு ஆகியோர் விசுவாசத்தில் உறுதிப்பட; டில்மோன் ஹெம்ரோம் இரத்த வாந்தியிலிருந்தும், ஜுடின் சோரேனின் கண்பார்வை சரியாகவும், சப்னா சோரேனின் கேட்கும் திறன் மேம்படவும் ஜெபிப்போம்.

**16**
**டிசம்பர்**
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. கவிதா திம்மேஷ்
திரு. ஃபெலிக்ஸ் கமாலியேல் எட்வர்ட்

# அஸோம்

## கோகாமுக்:
### பிரவீன் தாஸ் & மார்கிரெட்

**துதிக்க:** ஏழு நபர்கள் இயேசுவே மெய்யான தெய்வம் என்று கண்டு அறிக்கையிட்டனர். 10 நபர்களை (மொய்வாரி நூவா, தேவி குமாரி, பூஜா நூவா, லோக்கி நூவா, ராஜு நூவா, பின்டாரம், கிஷோர், திபு, பைட்டி, திபன்) சந்தித்து நற்செய்தி சொல்ல தேவன் கிருபை செய்தார். 3 கிராமங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்தவ விசுவாசத்தினால் சிறு கைக்குழந்தையுடன் கணவன் வீட்டிலிருந்து மாமியாரால் துரத்தப்பட்ட ஜுன்முனி பெகுக்கு தேவன் நல்ல வழியைத் திறக்க; விபத்தில் சிக்கி கால் முறிந்து சிகிச்சை பெற்று வரும் புதிய விசுவாசி கட்டிராம் விரைவில் குண மடைய; இயேசு திரைப்படம் பார்த்த சுமார் 750 பேரும் இயேசுவே உண்மையான தெய்வம் என்று உணர்ந்து கொள்ள ஜெபிப்போம்.

## கோஹ்பூர்: நாத்தான் குமார் பெபர்த்தா & நிருபோமா

**துதிக்க:** ஐந்து நபர்கள் கிறிஸ்துவின் மீதுள்ள அவர்களின் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். சுவிசேஷம் அறிவிக்கப் பட்ட கிராமங்களில் பின்தொடர் ஊழியம் நடைபெற்றது, ஊழியத்தின்போது மேற்கொண்டப் பயணங்களில் கர்த்தரின் காக்கும் கரம் நமது ஊழியர்களோடு இருந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்து வேதாகமக் கல்லூரியில் B.Th. படித்துக்கொண்டிருந்த மொகின்தர் திடீரென்று தேவ ராஜ்யத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதால் துயரத்தில் ஆழ்ந் திருக்கும் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக; கார்பட்டி கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்கவும், உள்ளூர் கிராம கமிட்டியின் அனுமதி கிடைக்கவும், திட்டமிடப்பட்டுள்ள வாலிபர் முகாம், சிறுவர் கூட்டங்கள், பெண்கள் கூடுகை ஆகியவை சிறப்பாக நடைபெறவும் ஜெபிப்போம்.

# சத்தீஸ்கட்

## லக்கன்பூர் & அம்பிகாபூர்:
### அருண் குமார் & சாரதி

**துதிக்க:** ஹண்சடான் கிராமத்தில் நடந்த நிகழ்ச்சியில் 2 பேர் இயேசுவே தெய்வம் என்று அறிக்கையிட்டனர். பஹட்பாரா கிராமத்தில் நடைபெற்ற 3 நாட்கள் உபவாச ஜெபத்திற்கு பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு தூக்கிவரப்பட்ட சகோதரி விசுவாசிகளின் ஊக்கமான ஜெபத்தினால் நடக்க ஆரம்பித்துள்ளார். பெண்களுக்கானக் கூடுகையில் சுமார் 200 பேர் கலந்து கொண்டனர். விடுமுறை வேதாகமப்பள்ளி நடத்தும் வாலிப பெண்களுக்கு விசேஷக் கூடுகை மற்றும் பயிற்சி நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுத்ருடாப், பெண்தோபானி மற்றும் தலடான் கிராமங்களில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆராதனைக்கு புதிய மக்கள் வரவும் ஜெபங்கள் கேட்கப்படவும், புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள 20 கிராமங்களில் நல்ல வரவேற்பு கிடைக்கவும், ஆராதனைகள் ஆரம்பிக்கப்படவும், திட்ட மிடப்பட்டுள்ள வாலிபர் மற்றும் பெண்கள் கூடுகை சிறப்பாக நடந்தேறவும் ஜெபிப்போம்.




**சம்ப்பா:**

**ரமேஷ்வர் தயாள் நிர்மல் & மதுகலா**

**துதிக்க:** டெல்கி மற்றும் பஹிரா கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டன. சம்ராத் கிராமத்தில் 3 நாட்கள் உபவாச ஜெபத்தில் அநேக விசுவாசிகள் கலந்துகொண்டு சிறப்பாக நடைபெற தேவன் உதவினார். சுந்தர்வன், காக்கரியா மற்றும் ஹசுவா கிராமங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டது. நீல்குமார்–சந்தோஷி குடும்பம் ராம்சரண், அமர்தாஸ் மற்றும் சுல்தான் ஜெகதீஸ் நம்முடைய ஊழியத்திற்கு உதவி செய்து வருகின்றனர். செம்காீத் கிராமத்தின் அனார்கலி காட்டில் வேலை செய்துகொண்டிருந்தபோது பாம்பு தீண்டலிலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** படஹா மற்றும் போகார்ட் கிராமங்களில் கிறிஸ்துவை இரட்சகராக அறிவிக்க தயாராகிவரும் புதிய விசுவாசிகளுக்காக; செம்காீத் கிராம சபைக்கு ஆலயம் கட்ட நிலம் கிடைக்க; சர்கோர் கிராமத்தில் ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துவரும் அஜெய் தீமர் மனம்மாற, பட்டோரி கிராம கௌரி பன்ஜாரே, சரிதா அன்ஜன் மற்றும் மானிக் சௌரி கிராம தன்பாய் தன்கடே இவர்களுக்கு தேவன் குழந்தை செல்வத்தைத் தர ஜெபிப்போம்.

**லுடேக்:**

**கருணாகரன் & எலிசபெத்**

**துதிக்க:** ஊழியம் முடித்து ஒரு மழைக்கால சாயங்கால வேளையில் இருசக்கர வாகனத்திலிருந்து மிஷனரி தன் மனைவியுடன் சாலை ஓரத்தில் ஒரு பள்ளத்தில் விழுந்தாலும் அதிக அடிபடாமல் கர்த்தர் காத்துக்கொண்டார். சிவ்பூர் கிராமத்தில் ஒரு ஆலயம் தேவனின் பெரிதான கிருபையினால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பென்டாஜோர் கிராமத்தில் சுமார் 100 வாலிபர்கள் பங்குகொள்ள வாலிபர் முகாம் சிறப்பாக நடைபெற்றது. 8 வருடங்களாக மனநிலை பிறழ்ந்து காணப்பட்ட பீடிமுண்டா கிராமத்தின் 21 வயது இளம் பெண் மரியம் தொடர் ஜெபத்தினால் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய கிராமங்களான இஸ்வாபூர் மற்றும் பீடிமுண்டா கிராமங்களில் புதிய தொடர்பாளர்கள் கிடைக்கவும் இங்கு ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்படவும், இஸ்வாபூர் கிராமத்தின் இளம் பெண் அஞ்சலி அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுபடவும், சிவ்பூரின் 20 வயது அகஸ்டஸ் வலிப்புநோயின் தாக்கத்திலிருந்து விடுபடவும், சந்தோஷ்–நிர்மலா, சைத்து–ஜோதி, ராஜேஷ்–அசோ ஆகிய தம்பதியினருக்கு தேவன் குழந்தைச் செல்வங்களை அருளிச் செய்யவும் ஜெபிப்போம்.

18
டிசம்பர்
திங்கள்

## குஜராத்

### போடேலி: ஏசுபாபு & உஷா

**துதிக்க:** ஹரீஸ்பாய் மற்றும் ரமேஷ் பாய் பெரும் விபத்தில் காயமின்றி காப்பாற்றப்பட்டனர். பாம்பு தீண்டி மரணத்திற்கு அருகாமையில் சென்ற சுதேச ஊழியர் குமிட்டாபாய் ஜெபத் தினால் குணமாக்கப்பட்டார். பிசாய் கிராமத்தில் இரவுக்கூட்டம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அஸ்மிதாபேன் ஜெபத்தினால் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிராமத்தில் நடந்த சாவினால் இருமுறை தள்ளி வைக்கப்பட்ட கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி விரைவில் தடையின்றி நடைபெற; சிக்கில் செல் அனிமியா நோயினால் நடக்க முடியாமல் இருக்கும் ராகேஷ்பாய் சுகம் பெற; நடத்த திட்டமிடப்பட்டிருக்கும் வாலிபர் முகாம் சிறப்பாக நடந்தேற ஜெபிப்போம்.

### சொரம்பா:
### புஷ்பராஜ் & ஜோதி நிர்மலா

**துதிக்க:** நமது விசுவாசிகளின் ஊக்க மான ஜெபத்திற்கு பிறகும் சனந்தோரா கிராமத்தின் 2 வயது சிறுவன் அவியன் சுகமில்லாமல் மரித்துப்போனான். ஆனாலும் புதிய தொடர்பாளர்களான பெற்றோர் விசுவாசத்தை உறுதிப் படுத்திக்கொண்டனர். கோர்பாட், சன்பூரா, சலையா, சுரா காக்ராபாரா, கிட்கி கிராமங்களில் நற்செய்தி புதிதாக அறிவிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குழந்தையை இழக்கக் கொடுத்த ராஜபாய் குடும்பத்தின் ஆறுதலுக்காக; 10 ஆண்டுகளாக குழந்தை பாக்கியமின்றி தவிக்கும் ராதாபேனுக்காக; வயிறு மற்றும் கால் வீக்கத்தினால் அவதியுறும் நரன்பாயின் சுகத்திற்காக; கோவன் மற்றும் புட்வாடா கிராமங்களில் நடத்தப் படவிருக்கும் பெண்கள் மற்றும் வாலிபர் கூடுகைகளுக்காக ஜெபிப்போம்.

### தேகாம்:
### கரோடா பிஸ்வா ரஞ்சன் & பிரபினா ராணி

**துதிக்க:** வெளிப்புற நற்செய்தி பகிர்தல் மூலமாக ஒரு கிராமத்தில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு ஒரு வேதாகமமும், 135 பேருக்கு சுவிசேஷ கைப்பிரதிகளும் வழங்கப்பட்டன. தன் பெற்றோருக்கும் ஊராருக்கும் அடங்காமல் பிறருக்கு துன்பம் வரவழைத்துக்கொண்டிருந்த அல்சுபாய் பெற்றோரின் தொடர்ந்த ஜெபத்தினால் மனந்திரும்பியுள்ளார். ராஜிபாய் குடும்பம் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டி வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால் தன் குடும்பத்தின் நபர்கள் மூலம் அதிக எதிர்ப்புகளை சந்தித்து வரும் ஷித்தல்பேன் தன் குடும்பத்தினரையும் கிறிஸ்துவின் அன்பிற்குள்ளாக அழைத்துவர; வைபவி சகோதரிக்கு இருதயத்தின் ஓட்டை சுகமாக, விஷ்ணு புற்றுநோயின் தாக்கத்திலிருந்து குணமாக ஜெபிப்போம்.

19
டிசம்பர்
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நிஷா டேவிட் மஸிஹ்

## மாண்சா:

### செல்லதுரை & கனகநேசம்

**துதிக்க:** வகாரி கிராமத்தின் தக்ஷாபேன் இரவிலே தூங்க முடியாமல் பல நாட்கள் கஷ்டப்பட்ட நிலையில் நமது ஊழியர் சந்தித்து சுவிசேஷம் அறிவித்து ஜெபித்தப் பிறகு நன்றாக தூங்குகிறார். நமது ஆராதனையில் குடும்பமாக பங்குகொள்கிறார். அம்பாதாலா, பார்ஜி, உனாதாலா கிராமங்களில் தனித்தனியாக நபர்களை சந்தித்து நற்செய்தியை பகிர்ந்துகொள்ள தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தாக்கூர், சென்மா, பர்மார் இனமக்கள் மத்தியில் சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு கிடைக்க; இங்குள்ள மக்கள் மாதாஜி என்கிற வழிபாட்டு அமைப்பின் பிடியிலிருந்து விடுபடவும், உண்மை தெய்வத்தைக் கண்டு கொள்ளவும், வகாரி கிராமத்தில் நடைபெறுகிற சிறுவர் ஊழியம் மூலம் இங்கு ஆராதனை ஆரம்பிக்கப்படவும் ஜெபிப்போம்.

## அஹ்வா:

### விக்னேஷ்வரன் & ஏஞ்சலின் எம்.

**துதிக்க:** கடந்த மாதம் 53 நபர்கள் இயேசுவே மெய்யான தேவன் என்று அறிக்கையிட்டனர். வாஞ்செட்ரம்ரான் கிராம ஆலயப்பிரதிஷ்டை சிறப்பாக நடைபெற்றது. வாஞ்செட்ரம்ரான் மலையில் 3 நாட்கள் உபவாச ஜெபம் அநேக விசுவாசிகள் கலந்துகொள்ள சிறப்பாக நடைபெற்றது. பம்பரியா கிராமத்தில் ஆண்கள் கூடுகையும், பிப்பல்பாடா, சிஞ்னகவுட்டா கிராமங்களில் பெண்கள் கூடுகையும் சிறப்பாக நடை பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மழைக்காலம் முடிந்து பிற மாவட்டங்களுக்கு கரும்பு தோட்டங்களுக்கு வேலை செய்யச் சென்றுள்ள நமது விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவும், பாதுகாப்புடன் இருக்கவும்; குந்தான கிராமத்தில் இரத்தம் உறைதல் காரணமாக கால் அகற்றப்பட்ட பாப்லுபாயின் காயம் விரைவில் ஆற; ஹார்பாடா கிராமத்தில் புதிதாக விசுவாசத்தில் வந்துள்ள சுமித்ரா பிசாசின் பிடியிலிருந்து விடுதலைப் பெற ஜெபிப்போம்.

## காக்கும் கரங்கள்!

*ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஓராவன் இனமக்கள் மத்தியில் பணியாற்றிக்கொண்டிருக்கும் நமது மிஷனரி ஜெபக்குமார் பெரியசாமி மனைவி மற்றும் சில சுதேச ஊழியர்களோடு புனா நகருக்கு முன்னேற்றப்பணிக்காகச் சென்றிருந்தார். புனா ஆலயத்தில் ஊழியத்தைக் குறித்து பணித்தளச் செய்தியினை அளித்துவிட்டு திரும்ப ஜார்க்கண்ட் போவதற்காக மும்பை கல்யான் ரயில் நிலையத்தில் இரவு 1 மணி அளவில் காத்துக்கொண்டிருந்தார். அப்போது நடை மேடையில் அருகில் நின்றுக்கொண்டிருந்த ஒரு வாலிபன் ரயில் புறப்பட்ட சமயம் பார்த்து இவர் கையிலிருந்து கைபேசியைப் பிடிங்கிக்கொண்டு ஓடிப்போய் ரயிலில் ஏறி மறைந்து விட்டான். அவனைப் பிடிக்க பின்னாலே ஓடினவரின் கால் தடுக்கி கீழே விழுந்து ரயிலின் சக்கரத் திற்குள் விழப்போனவரை பின்னாலே ஓடிவந்த சுதேச ஊழியர் தடுத்து பிடித்து காப்பாற்றினார். பெரிய அசம்பாவிதம் நடக்கவிடாமல் தேவன் தடுத்தாட்கொண்டார். தேவனுக்கே மகிமை!*

## 20 டிசம்பர் புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. தேவ கிருபை விஜய் பாபு

### சூரத்:

### மாதவராய் (ஓய்வு) & ஜெபதங்கம்

**துதிக்க:** கல்பேஷ் சொந்தமாக பிரின்டிங் தொழிலைத் தொடங்கவும், மூன்று மாதங்களாக வேலையின்றி இருந்த சைலேஷ் ஒரு நல்ல வேலையைத் தேடிக்கொள்ளவும் தேவன் கிருபை செய்தார். ஒரு சிறு வீட்டினுள் தனது 3 பெண் குழந்தைகளுடன் சிவானி தூங்கிக்கொண்டிருந்தபோது மின்விசிறி கழன்று விழுந்தபோதும் அதிக அடிப்படாதபடி தேவன் பாதுகாத்தார். சிவானியின் குடும்பம் ஒரு ஆட்டோ ரிக்ஷா வாங்க தேவன் உதவினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சூரத் மாநகர் எல்லைக்குள் வரும் கௌதம்நகர் ஆலயம் ஆக்கிரமிப்பு இடம் என்று இடிக்கப்பட்டுவிட்டது. வேறு பட்டா இடம் சச்சின் மற்றும் பேஸ்தன் பகுதிகளில் கிடைக்க; குஷ்புவிடம் பணம் வாங்கிக் கொண்டு திரும்ப தர மறுப்பவர்களுக்காக; பினாதேவி, லாலி, பூனம், அஞ்சு சகோதரிகளின் கணவர்கள் குடித்துவிட்டு மனைவிகளை அடிப்பதை நிறுத்த ஜெபிப்போம்.

### சஹயாத்ரி பிராந்தியம்:

### பி. வினு & சுகிமலர்

**துதிக்க:** பத்து இடங்களில் நடைபெற்ற கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சியில் 240 பேர் கர்த்தர் மீது தங்களின் அன்பை வெளிப்படுத்தினர். 13 இடங்களில் வாலிபர்களுக்கும் 15 இடங்களில் பெண்களுக்கும் 3 இடங்களில் உபவாச கூட்டங்களும் நடத்தப்பட்டன. தீஸ்கடி மற்றும் வாஞ்செட்டெம்ருன் கிராமங்களில் ஆலய மங்கலப் படைப்பு நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 17 இடங்களில் புதிதாகத் துவங்கப்பட்டுள்ள இரவுக் கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற; திவ்சி கிராமத்தில் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ள ஐந்து குடும்பங்கள் விசுவாசத்தில் பலப்பட; பிராந்தியத்திலுள்ள கொர்ஹாம் மற்றும் ராண்தா மாணவர் விடுதிகள் சிறப்பாக செயல்பட ஜெபிப்போம்.

## திருடு போன பொருள் வீடுதேடி வந்த அதிசயம்!

*மேற்கு வங்காளம் தபான் பணித்தளத்தைச் சேர்ந்தவர் தபாஸ் டுடு. சென்னையிலே ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் இவர் வருடம் 1முறை அல்லது 2முறை ஊருக்கு வந்து குடும்பத்தாரைப் பார்த்துச் செல்வது வழக்கமாகக் கொண்டிருப்பவர். தற்போது சென்னையிலிருந்து ஊருக்குப் புறப்பட்டவர் வீட்டிற்குத் தேவையான சில பொருட்களை வாங்கி கட்டிக்கொண்டு ரயிலில் கொல்கத்தா புறப்பட்டார். வரும் வழியில் பயணத்தின்போது அவரது அனைத்துப் பொருட்களும் திருடு போனநிலையில், வேதனையுடன் வெறும் கையுடன் ஊருக்கு வந்த அவரைப் பார்த்து, அனைவரும் பரிதாபப்பட்டனர். ரயிலில் திருடுபோன பொருட்கள் திரும்ப கிடைத்ததாக சரித்திரம் உண்டா? போனது போகட்டும் என்று ஆறுதல் கூற ஒரு கூட்டம் மக்கள் வந்தனர். ஆனால், ஜெபவீரரான தபாஸ் முழங்கால் யுத்தம் செய்ய ஆரம்பித்தார். குடும்பத்தார், உறவினர்கள் மற்றும் ஊரார் அதிசயப்படும் வண்ணம் பொருட்கள் கிடைத்துவிட்டன. ரயில்வே நிலையத்தில் வந்து வாங்கி செல்லவும் என்ற தகவல் ஓரிரு நாளில் வந்தது. துதி ஸ்தோத்திரத்துடன் சென்று திருடப்பட்ட பொருட்கள் அனைத்தையும் மீட்டுவந்தார். தேவ நாமம் அவ்வூரிலே மகிமைப்பட்டது!*

## 21 டிசம்பர்
வியாழன்

### நஸ்வாடி & கவாண்ட்:
**ஹென்றி சாலமோன் & ஏஞ்சல் ஜெபா**

**துதிக்க:** பத்து நபர்கள் இயேசுவே தெய்வம் என்று அறிக்கையிட்டு திருச்சபையில் தங்களை இணைத்துக்கொண்டனர். சுனில்பாயின் சிறுநீரகக்கோளாறும், லாவ்ரியாபாயின் நுரையீரல் பிரச்சினையும் ஜெபத்தின் மூலம் சுகமானது. விசுவாசத்தில் பின்மாற்றமடைந்திருந்த தேவ்சிங்பாய், சகன்பாய் மற்றும் தஹனிபாயின் குடும்பங்கள் மீண்டுமாக தங்களை கிறிஸ்துவுக்குள் புதுப்பித்துக்கொண்டனர். தாம்ஜிபாயின் நீண்ட வருட வேண்டுதலான வீடு கட்டுவதை சாத்தியமாக்கினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சங்கர்பாய், நர்சிங்பாய், கார்த்திபேன் மற்றும் சுரேஷ்பாய் கிறிஸ்துவை அறிக்கையிட இருக்கும் தடைகள் நீங்க; எதிர்ப்பினால் தன்பைடி, வட்டாடா, கைடி, புபா, வகுமா மற்றும் பத்தான் கிராமங்களில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கும் ஆராதனைகள் நல்ல சூழ்நிலைகள் உருவாகி, மீண்டும் ஆராதனைகள் துவங்கப்பட; லுலாபா - திவான்பாய், மாலே-லால்சிங்பாய், செலேக்டா-புத்லாபாய், அம்பாசபானி-பாவ்சுபாய், உக்ரோபாய், ரிலியாபாய் ஆகியோர் மனந்திரும்பி ஊழியத்திற்கும், ஊழியர்களுக்கும் இடையூறு விளைவிக்காமலிருக்க ஜெபிப்போம்.

### உமர்காம்:
**ஆசீர் மோசஸ் & அமிர்தா கோல்டா**

**துதிக்க:** ஐந்து நபர்கள் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் பற்று உறுதியை வெளிப்படையாக அறிக்கை செய்தனர். அகு கிராமத்தில் நடைபெற்ற முழுநாள் உபவாசக் கூடுகையில் 50-க்கும் அதிகமான விசுவாசிகள் கலந்துகொண்டு சக இனமக்களின் இரட்சிப்பிற்காக ஊக்கமாக ஜெபித்தனர். நவிநாகரி மற்றும் போரவ் கிராமங்களில் நடத்தப்பட்ட சுவிசேஷக் கூட்டங்கள் மூலம் 2 குடும்பங்கள் புதிதாக விசுவாசத்திகுள் வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அறுவடைக்கு காத்திருக்கும் நமது விசுவாசிகளுக்கு நல்ல மகசூல் கிடைக்க; கிறிஸ்துவை அறிக்கையிட தயாராக இருக்கும் நபர்களுக்கு நிலவுகின்ற தடைகள் நீங்க; எல்லாத் திருச்சபைகளிலும் மாதந்தோறும் திருவிருந்து ஆராதனை நடத்திட விரும்பும் விசுவாசிகள் மற்றும் அருட்பொழிவு பெற்ற ஊழியர்களின் முயற்சி கைகூட ஜெபிப்போம்.

### மேய்ப்பர்களின் சந்திப்பு!

*ராஜஸ்தான், சாம்ரானியா பணித்தளம். லுஹாரி கிராம விசுவாசியான திரு. பாலகிஷானின் மகன் ஜித்தேந்தர் காட்டிற்கு ஆடு மேய்க்கச் சென்றபோது, அங்கு சாக்ரி கிராம மேய்ப்பனான தர்மேந்தரைச் சந்தித்து, அவருக்கு இயேசுவை அறிவித்தார். அதைக்கேட்ட தர்மேந்தர் தனது பசுமாடு சுகவீனமாயிருப்பதாகவும், அதற்காக ஜெபித்தால் 'இயேசு சுகம் தருவாரா?' என்றும் வினவினார். விசுவாசத்துடன் ஜெபித்தால் சுகம் கிடைக்குமென்று ஜித்தேந்தர் பதிலளித்தார். பின்பு மாலையில் இருவரும் கூடி ஜெபித்தனர். அற்புதமாகப் பசுமாடு முழு சுகம் பெற்றது. எனவே, தர்மேந்தர் தற்போது தனது தாயுடன்கூட சேர்ந்து வந்து நமது லுஹாரி சபை ஆராதனையில் கிரமமாகப் பங்கேற்கிறார். அல்லேலூயா!*

22
டிசம்பர்
வெள்ளி

### பாவ்நகர்:
### அகிலேஷ் குமார் & கிரண்தேவி

**துதிக்க:** பாவ்நகர் பகுதியில் பாப்லுபேன் அதிக பலவீனத்தின் மத்தியிலும், மருத்துவர்கள் கைவிரித்த நிலையிலும் தேவ கிருபையால் அழகான குழந்தையைப் பெற்றெடுத்தார். பத்தித்கார் கிராமத்தில் வெளிப்புற சுவிசேஷம் அறிவித்தல் பணி சிறப்பாக நடைபெற்றது. சுமார் 750 பேர் நற்செய்தியை கேள்விப்பட்டனர். அர்ஜுன் மற்றும் சிவானிக்கு நீண்ட நாட்களாக இருந்துவந்த காய்ச்சலிலிருந்து சுகமடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வீட்டின் கூரையிலிருந்து கீழேவிழுந்து கால் முறிவு ஏற்பட்டுள்ள சிறுவன் அர்விந்த் விரைவில் குணமடைய; வெளி இடங்களிலிருந்து பாவ்நகருக்கு வேலைதேடி வந்திருந்த நிறைய மக்களில் சிலர் கிறிஸ்துவின் விசுவாசிகளாயினர். தற்போது வேலை முடிந்து தங்கள் ஊர்களுக்கு திரும்புகிறார்கள். அவர்கள் விசுவாசத்தில் உறுதியாக இருக்க ஜெபிப்போம்.

### மோஸ்தா:
### பால்ராஜ் & கோயில்புஷ்பம்

**துதிக்க:** சிஷா கிராமத்தின் அனிதாபேன் நீண்ட நாட்களாக நீடித்த சுகவீனத்திலிருந்து ஊழியர்களின் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்று கிராமத்தில் நடந்தக் கூட்டத்தில் சாட்சி கூறினார். விசுவாசி சம்பாபேனின் மகன் வீடுகட்டிக்கொண்டிருந்தபோது 2-வது மாடியிலிருந்து தவறி கீழேவிழுந்தபோதிலும் அதிகம் அடிப்படாமல் காப்பாற்றப்பட்டார். ஹன்சுபேன் தனது கணவர் குழந்தையுடன் இருசக்கர வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது கீழே விழுந்தாலும் அதிக காயமின்றி தப்ப கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அந்து கிராமத்தின் ஹித்தேஷ் பாயிக்கு நல்ல வேலை கிடைக்க; மனிலால்பாயின் மனைவி சக்குபேன் உடம்பில் புகுந்துகொண்டு துன்பம் தரும் தீயஆவி விலக; 13 வயது சிறுவன் ஜெயேஷின் மனநலம் நன்றாக தேற; திட்டமிடப்பட்டு இருக்கின்ற வாலிபர் முகாம் சிறப்பாக நடந்தேற ஜெபிப்போம்.

## *வழியெல்லாம் பாதுகாக்கும் வல்ல தேவன் நமக்குண்டு!*

*ஹிமாச்சலப் பிரதேசம் நேர்வா பணித்தளத்தில் குடும்பமாக தேவப்பணியைச் செய்து வருபவர்கள் மிஷனரி எஸ். இம்மானுவேல் & சங்கீதா தம்பதியினர். மலைப்பாங்கான பிரதேசத்தில் தன் மனைவியைப் பின்னால் அமரச்செய்து இருசக்கர வாகனத்தில் கிராமம் கிராமமாகச் சென்று நற்செய்தியினைப் பகிர்ந்து வருபவர்கள். சாலை மிகவும் மேடு பள்ளமாகவும் பெரிய பள்ளதாக்குகளால் ஆன பிரதேசமாகவும் இருந்தாலும் தங்கள் பணியினை செவ்வனே செய்து வருபவர்கள். ஒரு ஞாயிறு ஆராதனையை அத்துல் கிராமத்தில் நமது விசுவாசியொருவரின் தேநீர் கடையையொட்டியுள்ள வீட்டில் ஆராதனையை முடித்துவிட்டு தேநீர் அருந்த அழைப்பின் பேரில் சென்று அமர்ந்தனர். அப்பொழுது அங்கு வந்த ஒருவர், கடந்த முறை இவர்கள் வந்திருந்தபோது இவர்களைக் கொன்றுவிடும் நோக்கத்தில் இருவர் கையில் தடியுடன் இருசக்கர வாகனத்தில் இவர்களைத் தேடி அலைந்ததாகவும், ஆனாலும் அவர்கள் கண்முன்னே மிஷனரிகள் சென்றபோதும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் அங்கும் இங்கும் அலைந்துவிட்டு சென்றுவிட்டதாகவும் கூறினார். தேவன் தாமே தமது தூதர்களை அனுப்பி தனது ஊழியர்களைப் பாதுகாத்தக் கிருபையை எண்ணி ஊழியர் தம் குடும்பமும் விசுவாசிகளும் துதித்தனர். நாமும் தேவனுக்கு நன்றி சொல்லுவோமா!*

**23**
**டிசம்பர்**
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. அர்ச்சனா மோகன்

# தாத்ரா & நகர் ஹவேலி

### சில்வாசா:
**டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்**

**துதிக்க:** கான்வெல், கோரிபாடா மற்றும் அந்தர்பாடா கிராமங்களில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 182 பேர் கிறிஸ்துவின் மீது அன்பை வெளிப்படுத்தினர். 5 வருடங்களாக மனநலம்பாதிக்கப்பட்டு இருந்த போபாபாடா கிராம ரமேஷ்பாய் உபவாச ஜெபத்தின் மூலம் குண மடைந்தார். சங்குபேன், ஜான்கிபேன் ஆகியோரை பாம்பு தீண்டாமலும், சவீதாபேனை தேள் கொட்டுவதிலும் இருந்து கர்த்தர் பாதுகாத்தார். 4 கிராமங்களில் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் அநேக விசுவாசிகள் கலந்துகொள்ள சிறப்பாக நடந்தேறியதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடக்கவிருக்கும் வாலிபர் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற; அமிர்தா பேனுக்கு பக்கவாதம் சரியாக; 5 வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்து வரும் பாரு பேனுக்கு தேவன் குழந்தையை அருள; ஜக்கிபேன் மற்றும் பாரதி பேனுக்கு நல்ல கிறிஸ்தவ மணமகன்கள் கிடைக்க; சிலி கிராமத்தில் வாலிபர்கள் மற்றும் மூப்பர்கள் இடையேயுள்ள பிரச்சினை தீர ஜெபிப்போம்.

# மகாராஷ்டிரா

### போரடி:
**ஓம்பிரகாஷ் & சப்னா**

**துதிக்க:** 12 நபர்கள் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தினர். ஹர்னியா, அனந்பூர் மற்றும் ஆர்த்தே குர்டா கிராமங்களில் 142 பேருக்கு நற்செய்தி பகிரப்பட்டது. 2 கிராமங்களில் நடத்தப்பட்ட வாலிபர் முகாமில் 19 பேரும், 4 கிராமங்களில் நடத்தப்பட்ட பெண்கள் சிறப்புக் கூடுகையில் 136 பேரும் கலந்து கொண்டனர். போராபனி கிராமத்தின் சிறுமி ஐஸ்வர்யாவின் கழுத்திலிருந்தக் கட்டி தொடர் ஜெபத்தினால் மறைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும்மாதம் நடத்த திட்டமிடப்பட்டிருக்கும் வெளிப்புற நற்செய்தி கூட்டம், கிறிஸ்துவை அறிக்கையிடும் கூடுகை போன்றவை சிறப்பாக நடைபெற; வாடி கிராமத்தின் ராம் – அஞ்சலி தம்பதியினர் குழந்தை பாக்கியம் பெற; சஹானா கிராமத்தின் நிர்மலா காசநோயிலிருந்தும், உமாடி கிராம அனிதாபாய் மனநோயிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

## 24 டிசம்பர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. வேணி ஜாண்

### சாலீஸ்காவ்: திம்மண்ணா தீமோத்தேயு & மமதா நான்சி

**துதிக்க:** நாகாட் கிராமத்தின் துல்சிபாய் தனது நீண்ட நாள் பிரச்சினையான சிறுநீரகக்கோளாறு மற்றும் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து ஜெபத்தினால் விடுதலையடைந்தார். ஹிராபூர் கிராமத்தின் ஷிபா அறுவை சிகிச்சைக்குப்பின் தொடர்ந்த தலைவலி மற்றும் கண்ணில் நீர் வடிதல் போன்ற பிரச்சினைகளிலிருந்து ஜெபத்தினால் சுகமடைந்தார். பணித் தளத்தில் வாலிபர்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு நடத்தப்பட்ட முகாமில் தலா 60 பேர் உற்சாகமாக கலந்துகொண்ட தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நாகாட் கிராமத்தில் ஆரம்பிக் கப்பட்டுள்ள ஆராதனையை நிறுத்தச் சொல்லி மிரட்டும் ஆனந்தி சோன்வனே, நானா நிகம், விஷ்ணு சான்சனே மற்றும் ஆனந்த் ராவ் இவர்களை தேவன் சந்திக்க; சாலிஸ்காவ் பணித்தளத்தின் விசுவாசிகள் நிலமில்லாமல் கூலிவேலை செய்பவர்கள். ஆதலால் ஆலயம் கட்ட நிலம் கிடைக்கத்தக்கதான சூழ்நிலை அமைய; மஜ்ரே கிராமத்தின் மங்கேஷ் மற்றும் மகிமா மனநோயிலிருந்து குணமடைய ஜெபிப்போம்.

### சோப்டா & சாங்வி விடுதி: வசாவா பாங்சிங் மௌலியா & ஏமன்பேன்

**துதிக்க:** 8 கிராம சபைகளில் முழுஇரவு உபவாச ஜெபங்கள் சிறப்பாக நடத்தப்பட்டன. 2 கிராமங்களில் இயேசு திரைப்படம் காண்பிக்கப்பட்டன. விடுதி மாணவர் களுக்கு 3 நாட்கள் சிறப்புக் கூடுகை நடத்தப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடும்பப் பிரச்சினையில் சிக்கி தவிக்கும் குலாட்டிபாய் அதிலிருந்து விடுபட; விடுதி மாணவர்கள் எழுதப்போகும் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற; ரமேஷ் மற்றும் ரத்திலால் இரட்சிப்பின் அனுபவம் பெற ஜெபிப்போம்.

### கர்த்தரே தேவன்!

*மேற்கு சந்தால் வங்கப்பிரதேச பகுதியில் அட்கோரா கிராமத்தில் பூஜாரியாக வாழ்ந்துக் கொண்டிருந்தவர் ராம் முர்மு. வீட்டினுள் ஆலமரம் வளர்ந்து அதன் அடியில் அமர்ந்து குறி சொல்லி, பூஜை புனஸ்காரங்கள் நடத்தி வந்தார். வீட்டிலுள்ளவைகளைத் தவிர வேறு எதனையும் எங்கு கிடைத்தாலும் குடிக்காமலும் சாப்பிடாமலும் வைராக்கியமாக இருந்து வந்தார். விரதம் என்ற பேரில் அடிக்கடி மெய் வருத்தி அதுவே சத்திய வழி என்று மாய எண்ணம் கொண்டிருந்தார். அவருக்கு நீண்ட வருடங்களுக்குபின் பிறந்த மகன் மனோஜ்யைக் கண்டு அகமகிழ்ந்தார். சிறுவன் நடப்பதை, பேசுவதைக் காண ஆவலாயிருந்தார். அந்தோ பரிதாபம்! வருடங்கள் 7 உருண்டோடின. ஆனாலும் சிறுவன் நடக்கவே இல்லை. தன் முயற்சி மட்டுமன்றி பெரிய மந்திரவாதிகள், வைத்தியர்கள் அனைவரையும் அழைத்துவந்து, பேய்க்கும் நோய்க்கும் பரிகாரம் செய்தார். ஊருக்கெல் லாம் பரிகாரங்கள் பரிந்துரைத்தவருக்கு தான் போவது நிச்சயமற்ற, மாயவழி என்பது புலப்பட ஆரம்பித்தது. அருகாமையிலுள்ள ஹறிபோக்கார் கிராம ஆலயத்திற்கு தயங்கிச் சென்றவர் அங்கே விசுவாசிகளிடம் தன் மகனுக்காக ஜெபிக்க வேண்டினார். சொந்த மகனுக்காக ஜெபிப்பதைப் போல விசுவாசிகள் அழுது ஜெபிப்பதைக் கண்ணுற்ற ராம் முர்மு, உள்ளத்தில் கலங்கி தன் பாவங்களை அறிக்கையிட்டு தேவனிடத்தில் மன்றாடினார். தொடர்ந்த 2 மாத ஜெபத்தில் சிறுவன் நடக்க ஆரம்பித்தான். தற்போது குடும்பமாக கிறிஸ்துவை அறிக்கையிட்டு சாட்சியாக வாழ்ந்து வருகிறார். கர்த்தரே தேவன்!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. லிபெனி ஜமி

## கான்தேஷ் பிராந்தியம்:
### எம். வினு & சுபிலா

**துதிக்க:** இந்தப் பிராந்தியத்தில் கடந்த மாதம் 75 பேர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். வசாவா இனமக்களை அதிக அளவில் சந்திக்கும் நோக்கத்துடன் கடுக்கிபாடா கிராமத்தில் நடத்தப்பட்ட சபை மூப்பர் முகாமில் 27 பேர் ஆவலுடன் கலந்துகொண்டு பயிற்சிப் பெற்றனர். தனது சிறுவயதி லிருந்து வலிப்பு நோயினால் கஷ்டப் பட்டுக்கொண்டிருந்த பீம்சிங் தொடர்ந்து ஆலயத்திற்கு வந்து ஜெபித்துக் குண மடைந்தார். சக்லிம்மர் கிராமத்தில் நடைபெற்ற பெண்களுக்கான 2 நாட்கள் விசேஷக் கூடுகையில் 70 பேர் பங்கு பெற்றனர். தூக்கமின்மையால் கடந்த சில மாதங்களாக சரியாக சாப்பிடாமல் உடல் பலவீனமடைந்த தெபர்மால் கிராம லதா பக்தசிங் உபவாசத்துடன் ஆலயம் வந்து பொருத்தனையுடன் ஜெபித்தபோது தேவன் கொடுத்த நிம்மதியான தூக்கத்திற்காகவும், நல்ல பசிக்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோல்டார் கிராமத்தின் பர்சியாபாய் மற்றும் சுமித்ராபேன் தங்களின் பக்கவாத பாதிப்பிலிருந்து குணமாக; ஒல்பாடா மற்றும் தெபர்மால் கிராம சபையின் பிரச்சினைகள் நீங்கி ஒற்றுமை நிலவ; கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் இறுதிவரை விசுவாசத்தில் உறுதியாக நிற்க; வரும் மாதம் நடத்தப்படவிருக்கும் நிகழ்ச்சிகள் தடையின்றி சிறப்பாக நடத்தப்பட ஜெபிப்போம்.

## எட்டப்பள்ளி:
### வசாவே அர்விந்த் காலுசிங் & வால்வி எஜு

**துதிக்க:** கட்டா, கெடா மற்றும் கோட்மி பகுதிகளில் பெரிய அளவில் சுவிசேஷக் கூட்டங்கள் நடத்த தேவன் கிருபை செய்தார். உதேரா, தாதோர் மற்றும் ரெக்கானேர் பகுதிகளில் சுகமளிக்கும் கூட்டங்கள் நடத்தப்பட்டது. சவாரி கிராமத்தில் நடத்தப்பட்ட 3 நாட்கள் உபவாச ஜெபக்கூடுகையில் நிறைய பேர் கலந்துகொண்டு ஊக்கமாக ஜெபித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கசன்சூர் பகுதியில் நமது ஊழியத்தை தீவிரமாக எதிர்க்கும் ஜெய்சேவா அமைப்பிற்காக; ஆரம்பிக்கப்பட்ட வாட்டேகட்டா கிராம ஆலயப்பணி ஊர் மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. எதிர்ப்பு நீங்கி கட்டு மானப்பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட; கட்டாவாடா கிராமத்தில் தனது விசுவாசத்தினிமித்தம் எதிர்ப்புகளை எதிர்கொள்ளும் பாண்டு மஹா உறுதி யாக நிற்க ஜெபிப்போம்.

## 26 டிசம்பர் செவ்வாய்

### சித்தாரா பிராந்தியம்:
### சஞ்ஜீப் குமார் ஆன்ட்ரப் & ஸ்வர்ணலதா

**துதிக்க:** 22 நபர்கள் கிறிஸ்துவே ஆண்டவர் என்று அறிக்கையிட்டனர். சன்சூரியா, போரடி கிராமங்களில் நடத்தப்பட்ட சிறுவர் முகாமில் 56 சிறுவர்களும், சிக்காரிபாடா, பாடி, பிடுக்கி விகிர் கிராமங்களில் நடத்தபட்ட பெண்கள் முகாமில் 136 பேர்களும் கலந்துகொண்டனர். 18 கிராமங்களில் முதன்முறையாக சுவிசேஷம் சொல்லப் பட்டது, மேலும் 44 கிராமங்களில் பின் தொடர் ஊழியமும் நடத்தப்பட்டது. காட்டுக்குள் விறகு பொறுக்கச் சென்றிருந்த ரூல்சிங்பாய் பாம்பு தீண்ட வந்தபோது கிறிஸ்துவை நோக்கிக் கூப்பிட்டதினால் காப்பாற்றப்பட்டார். அசுத்த ஆவியின் உபத்திரவத்தால் உருண்டு புரண்டுக் கொண்டிருந்த ராகேஷ்பாய் ஆலயத்திற்கு உபவாச ஜெபத்திற்குக் கொண்டுவரப்பட்டு ஜெபம் செய்தபோது விடுதலை பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரமேஷ் மற்றும் ரத்திலால் கிறிஸ்துவை அறிக்கையிட தடைகளாக இருக்கும் காரியங்கள் நீங்க; விபத்தில் சிக்கி மருத்துவம் பார்த்துக்கொண்டிருக்கும் ரூபாபேன் விரைவில் குணமடைய, உம்ரடா, கோல்டியாபானி மற்றும் லக்டியா கிராமங்களில் நடைபெற்றுக்கொண்டி ருக்கும் ஆலயக்கட்டுமான பணிகள் சீக்கிரம் முடிவடைய; சிம்லிபாய் வலிப்பு நோயிலிருந்தும் ஜவான்சிங்பாய் காச நோயிலிருந்தும் சுகம்பெற ஜெபிப்போம்.

### சாவ்தா:
### வசாவா ரமேஷ்பாய் & சுனிதாபேன்

**துதிக்க:** 3 பேர் கிறிஸ்துவின் மீதுள்ள அன்பை வெளிப்படுத்தினர். 8 இடங்களில் முழுநாள் உபவாச ஜெபம் நடைபெற்றது, அதில் நிறைய விசுவாசிகள் கலந்து கொண்டனர். கர்ப்பப்பை இறங்கி கஷ்டப்பட்ட ரேக்கா தொடர்ந்த ஜெபத்தினால் சுகம் பெற்றார். ஆத்தும ஆதாயப்பயிற்சி 3 இடங்களில் சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜவான்சிங் மற்றும் ஆஷிஷ் காச நோயின் தாக்கத்திலிருந்து சுகமாக; உடல் பலவீனத்தினால் நடக்கயிலாம லிருக்கும் சகோதரி சஜ்யாபாய் சுகமடைய; சகோதரி சிம்லி அடிக்கடி வரும் வலிப்பு நோயிலிருந்து குணமாக ஜெபிப்போம்.

### *பலவீனரைத் தாங்குங்கள்!*

*மத்தியப்பிரதேசம் கண்டுவா பணித்தளத்தில் கடுக்கி கிராமத்தில் ஊர்மிளா என்ற இளம் பெண் மனநலக்கோளாறால் வீட்டைவிட்டு காணாமல் போய்விட்டார். பெற்றோர் பல இடங்களில் தேடிவந்தனர். ஒரு மாதமாகியும் பெண் திரும்பக் கிடைக்காத நிலையில் உறவினர்கள் அறிவுரையின்படி குறி சொல்லும் நபர்களிடம் சென்று பெண் இருக்கும் இடம் பற்றி குறிக் கேட்டனர். நாளாக நாளாக உறவினர்களும் ஊராரும் பெண்ணைப் பற்றி தவறாகவும் கேலியாகவும் பேசி பெற்றோரை துயரத்தில் அமிழ்த்தினர். இந்நிலையில் நம் விசுவாசி முன்னிபாய் அந்த குடும்பத்தைச் சந்தித்து ஆறுதல் கூறினது மட்டுமன்றி கிறிஸ்துவைப் பற்றி எடுத்துரைத்து ஜெபித்து வந்தார். ஒருமுறை சென்று ஜெபித்ததோடு மட்டுமன்றி தினந்தோறும் சென்று ஜெபித்து வந்தார். ஜெபத்தின் விளைவாக ஓரிரு நாட்களில் ஊர்மிளா எந்தவொரு பாதிப்புமின்றி வீடு திரும்பினார். பெண்ணை நல்ல சுகத்துடன் கண்ட பெற்றோர் ஆனந்த மடைந்தனர். ஜெபத்தைக் கேட்டு பெண்ணை திரும்ப வீட்டுக்கு அழைத்துவந்த தேவனை மகிமைப்படுத்தினர்.*

## 27 டிசம்பர் புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஹேமலதா பால் ரவிராஜ்

### இகத்புரி: நாகராஜன் & திலகவதி

**துதிக்க:** முக்கானே கிராமத்தின் அனிதாவின் சிறு வயது மகன் கார்த்திக் நிமோனியாவிலிருந்து ஊழியர்கள் ஜெபித்தபோது தேவன் குணமாக்கினார். முக்கானே மற்றும் தமனி கிராமங்களில் சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு காணப்படுகிறது. பாபாபேன் மற்றும் வைபவ் நீண்டநாட்களாக இருந்து வந்த பல்வேறு சரீர பலவீனங்களிலிருந்து ஜெபத்தினால் குணமானார். நீண்ட நாட்களாக சாப்பிட முடியாமல் உடல் பலவீனமாக இருந்த 5 வயது அருணாபேன் ஜெபத்திற்கு பிறகு கேட்டு வாங்கி சாப்பிடக் கூடிய அளவிற்கு குண மானதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாகனவிபத்தில் சிக்கி இடுப்புக்கு கீழே மிகவும் அடிபட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ஜுனாவாடி கிராமத்தின் இளம் வாலிபர்களான அனில், அமோல் மற்றும் சாம் விரைவில் பூரண குணமடைய; கிறிஸ்துவை இரட்சகராக அறிக்கையிட தயாராக இருப்பவர்களைக் குழப்பவும் மிரட்டவும் செய்கின்றவர்கள் தேவனால் சந்திக்கப்பட; அதிக உதிரப்போக்கினால் உடல் மெலிந்து பலவீனமாகக் காணப்படும் தரஞ்பாடா கிராமத்தின் மனிஷா பூரணக் குணமடைய ஜெபிப்போம்.

### முக்காடா: எம். சங்கர் & ஆனந்தி

**துதிக்க:** போடோசி கிராமத்தில் நடத்தப்பட்ட வெளிப்புற நற்செய்தி விழாவில் ஏராளமானோர் பங்குபெற்று சுவிசேஷம் கேட்டனர். கடடிப்பாடா மற்றும் வின்வளவு கிராமங்களில் நடத்தப்பட்ட பெண்களுக்கானச் சிறப்புக் கூடுகை ஆசீர்வாதமாக நடந்தேறியது. பம்ரிபாடா, வின்வளவு, பாவர்பாடா கிராமங்களில் ஆத்தும ஆதாயப்பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மொராண்டா கிராமத்தின் புதிய தொடர்பாளர் விமல் தனது சீறுநீரக அறுவை சிகிச்சையின் காயங்களிலிருந்து விரைவில் குணமடையவும், சிறுநீரகம் நன்றாக இயங்கவும், விசுவாசத்தில் பின் மாற்றம் அடைந்துள்ள ராய்தலே கிராம விசுவாசிகள் மறுபடியும் இயேசுவண்டை வரவும், ஜெயராம் பக்கவாதத்திலிருந்து குணமடையவும் ஜெபிப்போம்.

### ஜவஹர்:
### ஸ்ரீனிவாச ராவ் & ராஜ்யலட்சுமி

**துதிக்க:** கோக்கர்பாடாவில் நடந்தேறிய ஒருநாள் முழுஇரவு ஜெபத்தில் அநேக விசுவாசிகள் கலந்துகொண்டு பலன் பெற்றனர். சிங்லிச்சமால் கிராமத்தில் சபை மூப்பர்களுக்கு ஆத்தும ஆதாயப்பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்றது. லோகர்மால் கிராமத்தில் பெண்களுக்கான சிறப்பு முகாம் நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விபத்தில் சிக்கி கால்முறிவு ஏற்பட்டிருக்கும் 9 வயது சிறுமி திபிகா தாக்ரே விரைவில் குணமடைய; வேதாகம விளக்கக் கூட்டங்களுக்கு அதிக உற்சாகத்துடன் விசுவாசிகள் வந்து ஆத்மீக பலன் பெற; பெட்பா கிராமத்தில் நடக்கவிருக்கும் விடுதி மாணவர்களின் பெற்றோர் கூட்டம் மற்றும் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளுக்கான சபை மூப்பர்களின் ஆலோசனை கூட்டம் ஆகியவை சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

## 28 டிசம்பர்
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேவிட் மஸிஹ்
திருமதி. பாருட் சிலாபாய் ரடியா

### கோதாவரி பிராந்தியம்:

**பசவராஜா & சன்மதா**

**துதிக்க:** இந்த வருடம் இதுவரை 247 நபர்கள் இப்பிராந்தியத்தில் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். தலாசரி, தாகனு மற்றும் ஜவஹர் பணித்தளங்களில் உள்ளூர் ஆலயக் குழு ஏற்படுத்தப்பட்டு அதின் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றன. சூர்யமடா கிராமத்தில் சுவிசேஷத்தின் வரவேற்பு பற்றி ஆய்வு நடத்தப்பட்டது. தலோட்டா கிராமத்தில் புதிதாக ஆராதனைக் குழு உருவாக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கன்ஜாடா மற்றும் கொடாடு கிராமங்களில் விசுவாசிகளின் மத்தியில் காணப்படும் பின்மாற்றம் தடுக்கப்பட; சில்லர் பகுதியில் தொடங்கப்படவுள்ள பணித்தள விரிவாக்க நிலையத்திற்காக; வாக்கி மற்றும் ஊராப்பாடா பகுதிகளில் நிலவும் எதிர்ப்புகள் மறைந்துபோகவும், எதிர்க்கின்றவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும், உள்ளூர் கிராம கமிட்டிகளில் ஆலயக் கட்டுமானத்திற்கு அனுமதி கிடைக்கவும் ஜெபிப்போம்.

### அக்கல்குவா:

**ஜக்மோகன் சிங் & ஸ்வாதி**

**துதிக்க:** பின்தொடர்பணியின் மூலம் 26 நபர்கள் தனித்தனியாக சந்திக்கப்பட்டு தேவனின் அன்பை அறிந்து கொண்டனர். 4 கிராமங்களில் 4 நாட்கள் உபவாச ஜெபக்கூட்டங்கள் சிறப்பாக நடத்தப்பட்டன. ரீட்டு மற்றும் சீமாவுக்கு ஜெபத்தின் மூலம் நீண்ட வருடங்களுக்குப் பின் அழகான குழந்தைகள் பிறந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சரீரத்தில் அதிகப் பலவீனத்தினால் அவதியுறும் மோசாரா மற்றும் சங்கீதா பூரண குணமடைய; டேவிட் மனைவிக்கு சுகப்பிரசவம் நடக்க; பட்டிபாடா ஆலய பராமரிப்பு மற்றும் பழுது நீக்கும் பணிகள் செவ்வனே விரைவில் நடந்தேற; வரும் வாலிபர், மூப்பர் மற்றும் பெண்கள் கூட்டங்கள் திட்டமிட்டப்படி நடந்தேற ஜெபிப்போம்.

## கர்நாடகா

### கானாப்பூர்: வினயராஜ் & சாந்தா

**துதிக்க:** ஜீப் ஊழியம் மூலம் 6 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு 24 புதிய ஏற்பாடுகளும், நற்செய்தி பிரதிகளும் விநியோகம் செய்யப்பட்டன. நைகல்லி கிராமத்தில் 5 நபர்கள் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். செவிலியராக பணியாற்றும் பீனா நாந்தம் பணியாற்றும்போது கிறிஸ்துவின் அன்பினைக் கூறி 3 பேரை விசுவாசத்திற்குள் கொண்டு வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை அறிக்கையிட தயாராக இருக்கும் நபர்களுக்காகவும் தற்போது புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ளவர்களுக்காகவும், எல்லப்பா மற்றும் பசப்பா எந்தவித பிரச்சினையுமின்றி தங்கள் வீடுகளைக் கட்டிக்கொள்ள; புதிய விசுவாசிகளுக்கு இடையூறாக இருக்கும் பழைய விசுவாசிகளின் குடி மற்றும் புகைப்பழக்கம் அவர்களை விட்டு நீங்க ஜெபிப்போம்.

## 29 டிசம்பர் வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மணிசெல்வி சாரதி

### முன்ட்கோட்: சுனில் குமார் & தேகம் சங்கீதா லாலு

**துதிக்க:** வேலை செய்து கொண்டிருந்தபொழுது கீழே விழுந்து கை முறிவு ஏற்பட்ட ரமணா விரைவில் குணமடைந்ததற்காக; சண்டையும் வாக்குவாதமுமாகக் காணப்பட்ட அசாவினியின் குடும்பம் இயேசுவை ஏற்றுக்கொண்டபிறகு சமாதானம் காணப்படுகிறது. மஹாதேவி தவறான மருந்தை உட்கொண்டதின் மூலம் சர்க்கரையின் அளவு மிகவும் கீழே சென்ற நிலையிலிருந்து அவர் காப்பாற்றப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுசீலாவின் இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு இருதயத்திலுள்ள துவாரப் பிரச்சினை நீங்க; எப்போதும் சுகவீனமாக இருப்பதினால் வேலை செய்ய முடியாமல் ஜீவனத்திற்கு கஷ்டப்படும் நீலாம்மா பூரண குணமடைய; நிர்மலாவுக்கு நல்ல வேலைக் கிடைக்கவும், கர்ப்பமாக இருக்கிற அவரது மகளுக்கு சுகப்பிரசவம் ஆகவும் ஜெபிப்போம்.

### கஜேந்திரகடா: மஞ்ஜ்யா நாயக் & லமானி ரத்னா

**துதிக்க:** இரண்டு பேர் இயேசுவே தெய்வம் என்று அறிக்கையிட்டனர். 20 கிராமங்களில் தனித்தனியாக மக்களுக்கு நற்செய்தி கூறப்பட்டது. ஆனந்த் மற்றும் மயூர் பெரிய சாலை விபத்திலிருந்து காப்பாற்றப்பட்டனர். செங்கல் செய்யும் தொழில் சரியாக நடக்காமல் சோர்ந்து போயிருந்த சரணப்பா, உபவாச ஜெபத்திற்குப் பிறகு தொழில் சிறப்பாக நடப்பதாக சாட்சி பகிர்ந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சரக்கா சகோதரியின் மகனுக்கு படிப்புக் கடன் உதவி கிடைக்க; மல்லிகார்ஜீனின் பலசரக்குக் கடை நஷ்டத்தில் நடப்பது தடுக்கப்பட்டு லாபம் ஈட்டவும்; முனேஷ்பாயின் தச்சுத்தொழில் ஆசீர்வதிக்கப்படவும், பார்வதியின் நெஞ்சு பகுதியில் காணப்படும் வலியில்லாத கரும் புள்ளிகள் மறையவும் ஜெபிப்போம்.

### கௌரிபித்தனூர் & மதுகிரி: ஃப்ரான்சிஸ் துரைசாமி கே.& ஜெயந்தி பி.

**துதிக்க:** நமது விசுவாசிகள் சோமா சோரேன் மற்றும் அனிதா இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது பெரிய வாகனத்துடன் நிகழவிருந்த விபத்திலிருந்து தேவன் அற்புதமாக பாதுகாத்தார். நீண்டநாட்களாக விசுவாசத்துடன் ஜெபித்ததின் விளைவாக தானுஸ்ரீ மற்றும் நிர்மலா கர்ப்பமடைந்துள்ளார்கள். அஞ்சம்மா, அனில் மற்றும் அமுல்யா புதிதாக ஆலயம் வரத் தொடங்கியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்ததினால் பிற மதப்பூஜைகள் செய்ய மறுக்கும் ஜோடிபிஸ்ஹல்லி கிராமத்தின் லஷ்மிதேவம்மாவை வீட்டின் உரிமையாளர் வீட்டைக்காலி செய்யச் சொல்லிவிட்டார். அவருக்கு நல்ல வீடு கிடைக்க; ஆலயத்திற்கு வரும் மஞ்சுளாவை தடுக்கும் அவரது கணவன் மனம்மாற; லஷ்மி நாராயன் மற்றும் சாந்தாம்மாவின் கடன் பிரச்சினைகள் தீர ஜெபிப்போம்.

## 30 டிசம்பர்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. அன்பையா P.
திரு. அருண்குமார் G.
திரு. டேனியல் மார்வெல்ராஜ் D.

# ஆந்திரப் பிரதேசம்

## பலமநேர்:
### பால் குப்புசாமி & ஷைலா

**துதிக்க:** தற்சார்பு சபையாக வளர்ச்சி பெற்று வருகிற தல்லாபள்ளி சபையில் ஆண்டுவிழா நடத்தப்பட்டது. விசுவாசிகள் ஆலயத்திற்கு இசைக்கருவிகள் மற்றும் தேவையான சாதனங்கள் வாங்கிக்கொடுத்தனர். பசவராஜா மற்றும் கண்டிகிரஹா ஆராதனைக்கு வாரந்தோறும் புதிதாக அநேகம் பேர் வருகின்றனர். தொடர்ந்த ஜெபத்தினால் பெங்களூருவில் கவிதாவுக்கு வேலைக் கிடைத்துள்ளது. 10 கிராமங்களில் பின்தொடர்ப்பணி செய்யப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாலா, தனஞ்செய் மற்றும் மங்கம்மா குடும்பங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; வியாதியாக இருக்கிற சபை மூப்பர் பாவன் சுகம் பெற; கணவனை இழந்துள்ள கங்கம் மாவின் ஆறுதலுக்காக; அப்பினபப்ள்ளி, தலப்பள்ளி, கொலமாசனப்பள்ளி மற்றும் கஜவரலப்பள்ளி சபைகளிலுள்ள பின் மாற்றமடைந்துள்ள விசுவாசிகள் மீண்டும் தேவ அன்பிற்குள்ளாக வர ஜெபிப்போம்.

## தாமலச்செருவு:
### ஜாண் டேவிட்ராஜ் & ஞானசேகரி, அனில் மஹாலி & பிரசாந்தி

**துதிக்க:** சுகன்யாவின் தாயாரின் ஊக்க மான ஜெபத்தினால் பிரிந்துச் சென்ற சுகன்யாவின் கணவர் குருமூர்த்தி தனது மனைவியுடன் சேர்ந்து வாழ ஆரம்பித்துள்ளார். ஏர்ரேப்பள்ளி கிராமத்தின் நல்ல விசுவாசியான வாலிபன் எபநேசருக்கு பகுதிநேரமாக வேலை செய்துகொண்டே படிக்கும் வாய்ப்பை தேவன் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். தலியாரிப்பள்ளி கிராமத்தின் சுமதி வலிப்பு வந்து மாடியிலிருந்து கீழே விழப்போகும்போது ஒரு வாலிப தம்பி மூலமாக தாங்கிப்பிடித்து காப்பாற்றப்பட்டார். ஏர்ரேப்பள்ளி கிராமத்தின் விதவை பெண் ஜாய்ஸ்மேரி வாழ்வாதாரமின்றி கஷ்டப்படும்போது ஜெபத்தின் மூலம் அவருக்கு ஓய்வூதியம் கிடைக்க கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புல்வாண்டலப்பள்ளி கிராமத் தின் இரத்தினம்மா நரம்பு மண்டலப் பிரச்சினையிலிருந்து குணமாகவும், நின்றுபோயிருக்கிற ஆராதனை இந்த கிராமத்தில் மீண்டும் துவங்கப்படவும், கேசவபுரம் கோபி குடும்பம் கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்கின்ற வேளையிலே பில்லி சூனியத்தைக் குறித்துப் பயப்படுகிற பயம் அவர்களைவிட்டு அகல; எகுவானம்பள்ளி கிராமத்தின் லக்ஷ்சுமி அம்மா கிறிஸ்துவை அறிக்கையிட தடையாக இருக்கின்ற சித்தராமய்யா, மோஹனா, நாக அருஜுனா போன்ற வர்கள் மனம் மாற; குடும்பம் நடத்த பொருளாதாரரீதியாக கஷ்டப்படுகின்ற ராம சைமன் சிவாவுக்கு நல்ல வேலை கிடைக்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சௌதரி ராஜேஷ் தாவ்லிபாய்
திரு. அனில் மாகாலி

### அனந்தப்பூர் பிராந்தியம்:

**பால் ரவிராஜ் & ஹேமலதா**

**துதிக்க:** சில்லாமத்தூர், ரோத்தம், பெனுகோடா, கோட்ட செருவு, நல்லமடா பணித்தளங்களில் 21 கிராமங்களில் புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்டதில் 7 பேர் கிறிஸ்துவே தெய்வம் என்று அறிக்கையிட்டுள்ளனர். ரோத்தம் பணித்தளத்தின் பிரதுஷா வழக்கறிஞருக்கான தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற தேவன் உதவினார். சாய்நகர் கிராமத்தில் சபை மூப்பர்கள் பயிற்சிக் கூடுகை சிறப்பாக நடைபெற்ற தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கல்லூரி விரிவுரையாளர் தேர்வு எழுதப்போகும் சானு நல்ல முறையில் தேர்ச்சி பெற; ஒரு மாதமாக உணவு எடுக்காமல் பலவீனமாக இருக்கும் சன்ஜலி குணமடைய, ரூத் லாவண்யாவின் குடும்பத்தில் சமாதானம் நிலவ ஜெபிப்போம்.

## தமிழ்நாடு

### திருப்பாலைபந்தல்:

**அர்ச்சனா மோகன்**

**துதிக்க:** மிஷனரி அர்ச்சனா மற்றும் அவரது சிறு மகன் இருவரும் கடுமை யான காய்ச்சலிலிருந்து குணமாயினர். திருபால்பந்தல் கிராமத்தில் எலிசபெத் சகோதரிக்கு ஊர் நடுவே இருந்த இடம் ஊர் மக்களால் பயன்படுத்தப்பட்டு கொண்டிருந்ததால், அதில் எலிசபெத் வீடு கட்டிக்கொள்ள ஊர் மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். எலிசபெத் உபவாசமிருந்து ஜெபித்து வந்ததினால் அந்த தடை நீங்கி தற்போது வீடு கட்டும் பணியினை ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மேரியின் கடன் பிரச்சினை தீர; ரஜினா–ராஜா, ராஜேஸ்–ராணி, பார்தீபன் – மல்லிகா இவர்களுக்கு குழந்தை பாக்கியம் அருளப்பட; பாக்கியத்தம்மாவின் உடல் முழுவதும் காணப்படும் வலி நீங்க; எலிசபெத் எந்தப் பிரச்சினையுமின்றி வீடு கட்டி முடிக்க ஜெபிப்போம்.

### செங்கம்: கே.எஸ். ஜாஷ்வா

**துதிக்க:** சபை மூப்பர்களுக்கான ஆத்தும ஆதாயப்பயிற்சி முகாம் தர்மபுரி மற்றும் திருவண்ணாமலை பிராந்தி யங்களில் சிறப்பாக நடைபெற்றது. வாடிபட்டி மற்றும் நம்பிபட்டி கிராமங்களில் சபை ஊழியர்களுக்கானப் பயிற்சி நடைபெற்றது. வீராசாமியின் வீட்டிற்கு அருகாமையிலிருந்த மரமொன்றை மின்னல் தாக்கி, தீ பற்றி எரிந்தபோதும், அவர் வீட்டிற்கு சேதம் வராமல் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திட்டமிடப்பட்டிருக்கும் சுதேச ஊழியர்களின் குடும்பக் கூடுகை சிறப்பாக நடந்தேற; பரமானந்தல் மற்றும் செந்தூரில் நடக்கவிருக்கும் உபவாச ஜெபக்கூடுகை ஆசீர்வாதமாக நடைபெற; கராப்பட்டு மற்றும் மரப்பூரில் நடக்கவிருக்கும் மூப்பர் பயிற்சிக் கூடுகை சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.




***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***